Registered as a Newspaper     பக்கங்கள் 06     விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி     Peoples Daily

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     புரட்டாதி 14     (30-09-1993)     வியாழக்கிழமை     ஒலை 224

## குடும்ப அட்டைக்கு மண்ணெய் அடுத்த வாரம் முதல் விநியோகம்

யாழ். செயலகத்தினால் குடும்பம் ஒன்றிற்கு ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் ரூபா 25 வீதம் வழங்கப்படவுள்ளது. இக் கொடுப்பனவு அடுத்த கிழமை தொடக்கம் குடும்ப அட்டையைச் சமர்ப்பித்து பல நோக்குக் கூ. சங்கங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை யாழ். மாவட்டத்தில் விவசாயச் செய்கைக்கு இம்முறை 200 பரல் மண்ணெண்ணெய் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இம்முறை யாழ். செயலகத்திற்கு மண்ணெண்ணெய் எடுத்துவரப்படாமையை அடுத்து பல நோ. கூ. சங்கங்களிற்கு இம்முறை எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெயில் ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெயை கடனுக்கு கொள்வனவுசெய்து அதில் 200 பரலே விவசாயத்திற்கு ஒதுக்கியுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# புலிகள் - இராணுவம் உக்கிர சண்டை;

# 100 படையினர் பலி; பெருமளவினர் காயம்

## புலோப்பளை - அல்லிப்பளையில் இடைமறித்துத் தாக்குதல்

[பளை]

**அல்லிப்பளைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட உக்கிர மோதலில், நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். புலோப்பளை பகுதியில் இருந்து அல்லிப்பளை, கிளாலி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை அல்லிப்பளைக்கு அண்மையில் விடுதலைப் புலிகள் வழிமடக்கி தாக்கியபோதே இம் மோதல்இடம்பெற்றது.**

இயக்கச்சி - ஆனையிறவுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் காலை வெளியேறிவந்த இராணுவத்தினர் புலோப்பளைப் பகுதியை நேற்று முன்தினம் மாலை தரித்திருந்தனர். இவர்கள் நேற்றுக்காலை அல்லிப்பளை, கிளாலி நோக்கி முன்னேறமுயன்ற வேளையில் விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

ஆனையிறவு முகாமில் இருந்து நடத்தப்பட்ட பலத்த ஏறிகணை வீச்சிற்கும், படையுடன் நகர்ந்த டாங்கிகளில் இருந்து இடம்பெற்ற பீரங்கித்தாக்குதலுக்கும், இடையில் இவ் உக்கிர மோதல் நடைபெற்றது. இதேவேளை, விமானப்படை விமானங்கள், உலங்குவானூர்திகள், இராணுவத்தினருக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிகவும், நெருக்கமான நிலையில், அதாவது கைகலப்பு என்ற ரீதியில் இடம்பெற்ற இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் இயந்திரத் துப்பாக்கிகளையும், தானியங்கி ஆயுதங்களையும், சிறிய ரக மோட்டார்கள், மற்றும் எறிகணை செலுத்திகளையும் பயன்படுத்தி உக்கிர தாக்குதலில் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நவக்கிரி ஷெல்வீச்சு; ஐந்து பொதுமக்கள் பலி

[நமது நிருபர்]

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நவக்கிரி பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐந்துபேர் பலியானதுடன் 12பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 10மணியளவில் பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்காஇராணுவத்தினர் புத்தூர் நவக்கிரியை அண்டிய மக்கள் குடியிருப்புகள் மற்றும் பிரதான வீதிகளை நோக்கியே தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பல வீடுகள் பல தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி வடக்கு நவக்கிரியை சேர்ந்த கோணராஜா யோகேஸ்வரி [30], இவரது பிள்ளைகளான கோணராஜா மைதிலி [06], கோணராஜா றியோ [10], மற்றும் சுப்பையா பாலச்சந்திரன் [20], கதிர்காமவேல் அம்புஜன் [16] ஆகியோரே மரணமடைந்துள்ளனர்.

எறிகணைத் தாக்குதலினால் பீதியடைந்து வீட்டைவிட்டு வெளியேறிக் கொண்டு இருக்கும்போதே இப் பரிதாப சம்பவம்நடைபெற்றது [நி.சி]

### நவக்கிரி ஷெல் தாக்குதலில் 12 பேர் படுகாயம்

[நமது நிருபர்]

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் பலாலி முகாமிலிருந்து நடாத்திய அகோர எறிகணைத் தாக்குதல்களினால் காயமடைந்தோர் விபரம்: முத்து [வயது 56] பொன்னம்பலம் சசிதரன் [வயது 16], சின்னத்துரை சந்திரகாசன் [வயது 15], ஐயம்பிள்ளை சுப்பையா [வயது 33], வல்லிபுரம் சுப்பையா [வயது 55],

(6ஆம் பக்கம் பார்க்க)

# 50 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

புலோப்பளை - அல்லிப்பளைப் பகுதியில நேற்று இடம் பெற்ற உக்கிர சண்டையில் ஐம்பது விடுதலைப் புலிகள் வரை வீரச்சாவடைந்தாக தெரியவருகின்றது.

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ள அதே வேளை, யாழ்.குடாநாட்டில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பல இடங்களில் கறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன.

# 2 டாங்கிகள், 2 கவச வாகனங்கள் புலிகளால் நேற்று அழிப்பு

அல்லிப்பளைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட பெரும் மோதலில் இரு டாங்கிகள் இரண்டு கவச வாகனங்கள் என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

புலோப்பளை, அல்லிப்பளைப் பகுதியில் இருந்து இளவிப் பகுதியை நோக்கி பல கனரக வாகனங்கள் சகிதம் பெருமளவு இராணுவத்தினர் முன்னேற முயன்றனர். இதன்போது இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் உக்கிரத் தாக்குதலை மேற்கொண்டு மேற்படி நான்கு கனரக வாகனங்களையும் கைப்பற்றி முற்றாக அழித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கைப்பற்றிய ஆயுதங்கள் சில;

(சாவகச்சேரி)

புலோப்பளை - அல்லிப்பளைப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் பலரக நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவற்றுள் மோட்டார்கள், எல்.எம்.ஜிகள், தானியங்கித் துப்பாக்கிகள், 203 எறிகணை செலுத்திகள் மற்றும் வெடி பொருள்களும் அடங்கியுள்ளன. அவற்றுள் சில:

| | | |
|---|---|---|
| ★ ஜீ. பீ. எம். ஜீ | — | 02 |
| ★ ஏ கே. எல். எம். ஜி. | — | 03 |
| ★ மினி மி | — | 01 |
| ★ எல் - 3 | — | 02 |
| ★ ஆர். பி. ஜி. | — | 03 |
| ★ 60 எம், எம். மோட்டார் | — | 02 |
| ★ 40 எம், எம். பிஸ்டல் | — | 03 |

இவை தவிர மேலும் தானியங்கித் துப்பாக்கிகளும், ரவைகளும், வெடிப் பொருள்களும், இராணுவ உபகரணங்களும் இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஏனைய ஆயுதங்களின் விபரம் நாளைய பத்திரிகையில் வெளிவரும்.

## வடக்கில் 'யாழ்தேவி' நடவடிக்கை ஆரம்பமாம்

(கொழும்பு)

குடாநாட்டின் தென்பகுதியில் ஆனையிறவுக்கு வடக்கே கடந்த திங்களன்று காலை ஆரம்பிக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை 'ஒபரேஷன் யாழ்தேவி' என்ற குறி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## விமானங்கள், ஹெலிகள் இரவிரவாக நடமாட்டம்

பலாலி விமான நிலையத்திற்கும் ஆனையிறவிற்கும் இடையே பல தடவைகள் உலங்குவானூர்தி இரவிரவாக பறந்து திரிந்ததை நேற்று அவதானிக்க முடிந்தது. மேலும் நேற்றிரவு முழுவதும் விமான நடமாட்டம் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாக 'அவ்ரோ' விமானங்கள் பல தடவை பலாலியிலிருந்து தெற்கு நோக்கி சென்றமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் அஞ்சலிக்கு மாவீரர் புகழுடல்கள்

இயக்கச்சி, ஆனையிறவுப் பகுதிகளில் நேற்று முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவைத் தழுவிய வீர வேங்கைகளின் வித்துடல்கள் வலிகாமக் கோட்டத்தில் சுன்னாகம் மத்திய சந்தையிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும், வடமராட்சிக் கோட்டத்தில் நெல்லியடியிலும் மக்களின் அஞ்சலிக்காக இன்று பிற்பகல் 2.00 மணியளவில் வைக்கப்படும்.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து இறுதி வீரவணக்கக் கூட்டங்கள் நிறைவுற்றதும் பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் மாலை 4.00 மணியளவில் முறையே கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கும், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்திற்கும், எல்லங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு அவ்வத் துயிலுமில்லங்களில் இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

தலைகளை மேற்கொண்டனர்.

இதனால் பல வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் கடைகளும்சேதமடைந்ததாக

காயமடைந்தோர் விபரம்:

புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்தவர்களான சந்தசாமி தங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# புத்தூர் பகுதியில் ஒருவர்பலிஇருவர்காயம்

(நமது நிருபர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து புத்தூர் ஆவரங்கால் பகுதிகளில் ஏவப்பட்ட எறிகணைத்தாக்குதலில் ஒருவர்மரணம அடைந்துள்ளதுடன் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

புத்தூர் கிழக்குப் பகுதியில் நண்பகல் 1.30 மணியளவில் விழுந்து வெடித்த எறிகணையினால் அப்பகுதியைச் சேர்ந்த கணபதி தர்மலிங்கம் (வயது 58) மரணமடைந்ததுடன் இவரது மகளும் வழிப்போக்கர் ஒருவரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

## கொட்டடியில் இருவர்காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து யாழ் நகரக் கரையோரப் பகுதி மீது நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 5 30 மணி முதல் சுமார் ஒரு மணி நேரமாக தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் சந்திரகுமார் (வயது 20), செல்லத்தம்பி தனபாலன் ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

# எனக்கு மேல் விழுந்த நால்வர் துடிதுடித்து மரணமாகினர்

## நவக்கிரியில் உயிர்தப்பியவர் தெரிவிப்பு

[நமது நிருபர்]

எறிகணைக்கு அஞ்சி நிலத்தில் விழுந்து படுத்த போது எனக்கு மேல் பலர் வீழ்ந்தனர் இதனால் எறிகணை வெடித்த போது என் மேல் வீழ்ந்து கிடந்தவர்களில் நால்வர் துடிதுடித்துப் பலியாகினர். மற்றும் நால்வர் காயமடைந்தனர். நான் எதுவித காயமுமின்றி தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டேன் என நேற்று நவக்கிரி பகுதியில் நடைபெற்ற எறிகணைத்தாக்குதல்களில் தப்பிய ஐயாத்துரை சாந்தகுமார் என்பவர் நமது நிருபருக்கு தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் பற்றி அவர் மேலும் விளக்குகையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அச்சுவேலி பகுதியிலிருந்து 10,000 பேர் இடம்பெயர்வு

[நமது நிருபர்]

சிறிலங்கா இராணுவத்தின் மூர்க்கத்தனமான எறிகணை வீச்சினால் பீதியடைந்த நான்கு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த சுமார் 2500 குடும்பங்களைச் சேர்ந்த பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்து புத்தூர், ஆவரங்கால், கோப்பாய், இருபாலை பகுதிகளில் உள்ள கோவில்கள், பொது மண்டபங்கள், பாடசாலைகள் மற்றும் அவர்களின் உறவினர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனையின் இரத்த வங்கியில் இரத்தம் பற்றாக்குறையாக உள்ளது எனவே உடனடியாக சகல பிரிவு இரத்தமும் தேவைப்படுவதாக கூறப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இத்தாவில் பகுதியில் இருவர் பலியாகினர்

[தென்மராட்சி]

தென்மராட்சி இத்தாவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலினால் ஒரு பெண்ணும் அவருடைய மகளும் உடல் சிதறிப் பலியாகினர்.

நேற்றுக் காலை இடம் பெற்ற தாக்குதலிலேயே இவ்வாறு இவ் இருவரும் பலியாகியதாக தெரியவருகிறது. (86)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கதிரவேல் கிருபாகரன் என்பவருடைய சாரதிஅனுமதிப் பத்திரம் (DL192844) தேசிய அடையாள அட்டை [641381950V] என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [6137]

### ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

வேலணை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் திரு பொ. சிவகுருநாதன் ஒக்டோபர் மாதம் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்றார் எனவும் இதையொட்டி அவர் ஒக்டோபர் 9ஆம் திகதியன்று வேலணைக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு 'மதிய போசன விருந்தொன்றை' அளிக்கவுள்ளார் என்றும் மேற்படி கோட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

### வாய்க்கால் வேலை நிறைவுற்றது

வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் தெற்குப் பிரதேசத்தில் நெல் வயல் கழிவு நீர் அகற்றும் வாய்க்கால் வேலை முடிவடைந்துள்ளது.

அதேவேளை நாகர்கோவில் கிழக்கு, மேற்கு வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி முதலாம் கட்ட வேலைகளும் பூர்த்தியாகிவிட்டது (30)

### சுருக்கெழுத்துக் கழக 8ஆம் ஆண்டு நிறைவு

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் [illegible] கரவெட்டியில் இருக்கும் பிரதான செயல

# நெல் எடுத்துச் செல்லவும் இராணுவ அனுமதி தேவை

## மட்டு. இராணுவ இணைப்பதிகாரி உத்தரவு

(மட்டக்களப்பு)

வயலில் அறுவடை செய்த நெல்லைக் கொண்டு செல்வதற்கும் படையினரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு பிரதேச இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பட்டிருப்பு மகா வித்தியாலய மண்டபத்தில் நவகிரிகுள நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பான விவசாயிகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இந்த உத்தரவை அறிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு ஏக்கருக்கு 75 புசல் என்ற ரீதியில் மட்டும் விவசாயிகள் நெல் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும். அமோக விளைச்சல் ஏற்பட்டதாக விவசாயப் பகுதி சிபார்சு செய்தால் மட்டுமே கூடுதல் நெல்லுக்கு அனுமதி வழங்கப்படும். விவசாயிகள் நெல்லை ஆலைகளுக்கு எடுத்துச் செல்ல தனி அனுமதி பெற வேண்டுமெனவும், வியாபாரிகள் ஆலைகளுக்கு நெல் எடுத்துச் செல்வதாயின் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியை படையினருக்குக் காட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மாவட்ட அரச அதிபர் தமதுரையில் நமது சக்திக்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளை நாம் கேட்காமலும், பார்க்காமலும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதைவிட ஏறாவூர் விவசாயிகள் மத்தியில் பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனா உரை நிகழ்த்துகையில், மட்டக்களப்பு உறுகாமம் பகுதியிலுள்ள சந்தன ஆற்றுக்கு மேற்கேயும், முகுந்தன் ஆற்றுக்கு மேற்கேயும் உள்ள சுமார் ஐயாயிரம் ஏக்கர் விவசாய நிலத்தில் எதிர்வரும் பெரும்போகத்தின்போது விவசாயம் செய்வதற்கு இராணுவம் தடை விதித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் வலி வடக்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள இளவாலை, மாதகல் பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பிரதிநிதிகள் இருவர் இன்று பயணமாகின்றனர்.

இவர்கள் இப்பகுதியில் இராணுவ பிடியில் சிக்குண்டுள்ள மக்கள் நலன்களைக் கவனிப்பதுடன் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ள கைதிகளையும் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது (நி), (ஒ)

## பிரதமருக்குக் கத்தரிக்கோல் தர பாடசாலை மாணவி மறுப்பு

### கந்தான பாடசாலையில் சம்பவம்

(கொழும்பு)

திறப்புவிழா ஒன்றிற்காக வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கத்தரிக்கோல் வழங்க பாடசாலை மாணவி மறுப்பு தெரிவித்தார்.

இச் சம்பவம் அண்மையில் கந்தான பகுதியிலுள்ள சென் மேரிஸ் கல்லூரியில் இடம் பெற்றது. இப்பாடசாலையின் புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராக வருகை தந்தார். நாடாவை வெட்டித் திறந்து வைக்க வேண்டிய நேரத்தில் கத்தரிக்கோல் அவரிடம் கொடுக்கப்படவில்லை. அருகிருந்த மாணவி ஒருவர் கத்தரிக்கோலை வைத்திருக்கவே பிரதமர் கத்தரிக்கோலைத் தரும்படி அம் மாணவியிடம் கேட்டார். ஆனால் தம்மிடம் கத்தரிக்கோலை ஒப்படைத்த ஆசிரியை தட்டில் வைத்தே கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும் தட்டு எடுக்கச் சென்ற ஆசிரியை திரும்பி வரும் வரை தரப்போவதில்லை என்றும் கூறி மாணவி மறுத்து விட்டார்.

பாடசாலை மாணவியின் கண்டிப்பை பாராட்டிய பிரதமர் ரணில், சட்டம் அனைவருக்கும் பொதுவானதே. எல்லோருக்கும் ஒரே மாதிரியே அது அமுலாக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## பேச்சுவார்த்தை ஆரம்பிக்க கத்தோலிக்க திருச்சபை கோரிக்கை

### முகாமைத்துவ பயிற்சி

(தொல்புரம்)

கிராமமட்டத் தலைவர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி அக்டோபர் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிக்காக சனசமூக நிலையங்களின் செயலாளர்கள் ஊடாக யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்தில் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு வடபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் முகாமைத்துவப் பயிற்சிக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் எதிர்வரும் அக்டோபர் 2-[illegible] யாழ் பல்கலைக்கழகத்தில் மேற்படி பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அன்றையதினம் காலை 8.45 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு சமுகமளிக்கும்படியும், இப்பயிற்சி தொடர்ந்து வார இறுதி நாட்களில் முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு முடிவடையவுள்ளதெனவும் பயிற்சிக்கான கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (41) (பா)

### கருத்தரங்கு

தமிழீழ திருவள்ளுவர் மன்றம் நடாத்தும் கருத்தரங்கு தொடரில் இம்மாத நிகழ்ச்சி இன்று வியாழன் மாலை 4.00 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். திருவள்ளுவர் காட்டும் சால்பு எனும் பொருளில் கருத்துரை வழங்கப்படும்.

### சுகாதார கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையமும் யாழ் பல்கலைக்கழக சமுதாய மருத்துவப் பிரிவினரும் இணைந்து நடாத்தும் கருத்தரங்கு தொடர்பான இரண்டாவது சுகாதாரக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாசையூர் இளைஞர் மன்றத்தில் நடைபெறும்.


அரசாங்க அறிவித்தல், சுகாதாரத் திணைக்களம்.

**தளபாடத் திருத்த வேலைகளுக்கான கேள்வி கோரல்கள்**

கீழ்க்காணும் வைத்திய நிலையங்களில் உள்ள தளபாடங்களைத் திருத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன இத்தளபாடங்களை அந்தந்த வைத்தியசாலைகளில் சென்று பார்வையிட்டு, அதற்கான கேள்விகளை எனது பணிமனைக்கு 21-10-1993ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

1) சு. சே. பி. ப. பணிமனை, யாழ்ப்பாணம்.
2) மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி.
3) சுற்றயற் கூறு, கோப்பாய்.
4) சுற்றயற் கூறு, சங்கானை.
5) சுற்றயற் கூறு, பளை.
6) மத்திய மருந்தகம், கைதடி.
7) பாலியல் நோய் தடுப்பு நிலையம் 33ஆம் அறை, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
8) மார்புநோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்.
9) மலேரியாத் தடை இயக்கம், யாழ்ப்பாணம்.
10) பற்சிகிச்சை நிலையம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
11) மகப்பேற்று மருத்துவமனை, கரவெட்டி.
12) மகப்பேற்று மருத்துவமனை, வரணி.

மேற்கூறப்பட்ட நிலையத் தலைவர்கள் தளபாடங்கள் திருத்தம் சம்பந்தமாகப் பார்க்க வருபவர்களுக்கு திருத்த வேண்டிய தளபாடங்களைக் காட்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வைத்தியகலாநிதி க. நா. சிவபாதம்,
பிராந்திய தொற்று நோயியலாளர்,
பிராந்திய பணிப்பாளருக்காக.

சு. சே. பி. ப. பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். 28-09-93 [சி-7517]

[illegible]
ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் [illegible]வெட்டியில் இருக்கும் பிரதான செயலகத்தில் நாளை வெள்ளி பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெறவுள்ளன.

## தேர்தலில் ஈடுபடக்கூடும்

[ஜோகானஸ்பர்க்]

தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள பலகட்சி தேர்தல் தொடர்பான பேச்சுக்களை கன்சர்வேட்டிவ் ஸுலு இயக்கமும் அதன் தலைவர் மங்கோசுது புத்தலேசியும் பகிஷ்கரித்து வருகின்றபோதும் தேர்தலில் அவ் இயக்கம் கலந்து கொள்ளக்கூடும் என்று தென் ஆபிரிக்க அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## மாதாந்த சொற்பொழிவு

சிவகுருநாத குருபீடம் மாதாந்தம் வழங்கும் சொற்பொழிவு வரிசையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் தம் செய்வோர் தம் கருமம் செய்வார் என்ற தலைப்பில் பண்டிதர் மை நமசிவாயக்குருக்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.

## நிவாரணம் வழங்க கோரிக்கை

கடற் பிரந்திய தடைச் சட்டத்தால் கடற்தொழிலாளர்கள் வருவாய் எதுவுமின்றிப் பட்டினியில் சாகும் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து தடுக்க உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் சனசமூக நிலையம் யாழ் அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளது.

## தட்டெழுத்தாளர் வெட்டுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

நடைபெற்ற தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் பரீட்சையின் யாழ் மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி வெளியாகியுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்களுக்கு 90 ஆகவும் ஆங்கில தட்டெழுத்தாளர்களுக்கு 48 ஆகவும் சுருக்கெழுத்தாளர்களுக்கு 88 ஆகவும் வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## பேச்சுவார்த்தை ஆரம்பிக்க கத்தோலிக்க திருச்சபை கோரிக்கை

[கொழும்பு]

நீதியும், சமாதானமும் நிலைநாட்டப்படுவதற்கான பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று கத்தோலிக்க திருச்சபை மலை மாவட்டங்களின் நூற்று எட்டாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கொழும்பு மேற்றிராணியார் அதி வண. ஆயர் கெனத் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடானது பெரிதும் உற்சாகம் அளிப்பதாகவும், சகல மோதல்களும் என்றாவது ஒருநாள் பேச்சுவார்த்தை மூலமே முடிவிற்கு வரும் என்ற தமது கருத்தை இது நிரூபிப்பதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## தோட்ட நிர்வாக பொறுப்பை கம்பெனிகள் தொடருமா?

(கொழும்பு)

பெருந்தோட்டங்களின் நிர்வாகத்தை பொறுப்பேற்றிருக்கும் கம்பெனிகள் தோட்டங்களில் நிலவும் மையையும் கையளிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்ட நிர்வாகத்தை மட்டுமே பொறுப்பேற்றுள்ள நிலையில் தோட்டங்களில் முதலீடு செய்ய கம்பெனி நிர்வாகங்கள் தயக்கம்காட்டி வருவதாகவும் இந்த நிலை நீடிப்பதால் தனியார் கம்பெனிகள் நிர்வாகப் பொறுப்பை தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகமாக இருப்பதாகவும் நம்பகரமாகக் கூறப்படுகிறது.

தற்போது பெருந்தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருக்கும் தனியார் கம்பெனிகள் ஒவ்வொன்றும் வங்கிகளிலிருந்து பத்துக் கோடி ரூபா மேலதிகப் பற்றாக பெற்று ரூபா [illegible] நட்டம் ஏற்படும் நிலையில் தொடர்ந்தும் இவற்றை கம்பெனிகள் பொறுப்பேற்குமா என்பது குறித்தும் ஐயம் எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தோட்டங்களில் தொழிலாளர் பிரச்சினை மற்றும் தொழிலாளர்களின் சேமநல வசதிகள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டு வருவதும் தெரிந்ததே.

## சிற்றூழியர் நேர்முகப்பரீட்சை கலந்து கொண்டோர் குறைவு

[யாழ்ப்பாணம்]

வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு குறிப்பிட்ட தொகையிலும் பார்க்க குறைவான எண்ணிக்கையானோரே சமுகம் தந்ததாக யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று நான்கு நேர்முகப் பரீட்சைநிலையங்களில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளுக்கு சுமார் 200 பேரின்வரவு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுமார் 100 பேரே வரவு தந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இப்பரீட்சைகள் இன்றும் தொடர்ந்து எதிர்வரும் 8ஆம் திகதிவரையும் நடைபெறவுள்ளது.


யாழ். மாவட்ட தனியார் கல்வி ஒன்றியம்

**முக்கிய அறிவித்தல்**

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தேவையான சிட்டைப் புத்தகங்கள் எமது செயலகத்தால் விற்பனை செய்யப்படுகின்றன யாழ் மாவட்டத்தில் உள்ள தேவையான நிறுவனங்கள், முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

இல 19, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பொதுச்செயலாளர்
யாழ் மாவட்டம்
(சி,7512)


[illegible]
பெரும்பேறு கத்தின்போது விவசாயம் செய்வதற்கு இராணுவம் தடை விதித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

[illegible]
தரங்கு இன்று பிற்பகல் 1 30 மணிக்கு பாசையூர் இளைஞர் மன்றத்தில் நடைபெறும்.

## அமெரிக்க வானொலி நிலைய இரணவிலவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிலாபம் பகுதியில் இரணவில கிராமத்தில் அமெரிக்க வானொலி ஒலிபரப்பு நிலைய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதயாத்திரை நடத்தியும், ஆர்ப்பாட்டம் செய்தும் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

சிலாபம் நகரிலிருந்து இரண்டரைமைல் தொலைவிலுள்ள அம்பன்பொந்தவில கிராமத்தில் ஆரம்பித்த இப்பாதயாத்திரையில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் அமெரிக்க வானொலி நிலைய முன்பாக பெரும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் பலமணி நேரம் நீடித்தது என்பதும் நவீன ஆயுதங்கள் தாங்கிய பொலிசார் சிலாபம் நகருக்கு வெளியூர்களிலிருந்து கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கப்பலிலிருந்து பொருள்கள் இறக்குதல் ஸ்தம்பிதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறையில் கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று முன்தினம் ஸ்தம்பிதமடைந்தன. ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. இத் துறைமுகத்திற்கு காலையில் வந்த 'மரினல்' கப்பல் 9 30 மணியளவில் காங்கேசன் துறைக்கு திரும்பிச் சென்றது. மா மூடைகளை இறக்கிக் கொண்டிருந்த இக் கப்பலை காங்கேசன்துறைக்கு உடனடியாக திரும்புமாறு கடற்படையினர் பணித்ததையடுத்து இக் கப்பல்கள் மா மூடைகளை இறக்கிய குறையில் காங்கேசன்துறை நோக்கிச் சென்றது.

காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறை துறைமுகம் நோக்கி வந்த 'குமாரி' கப்பலும் நடுவழியில் வைத்து திரும்பிச் சென்றது முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையினால் பொருள்கள் இறக்கும் வேலைகள் பாதிப்படைந்ததோடு பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும் லொறிகளும் திரும்பிச் செல்ல நேரிட்டது.

இத்தகைய நடவடிக்கையினால் இத் துறைமுகப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. [யோ]

## கச்சதீவு மீன்பிடி உரிமை சிறிலங்கா-இந்தியா பேச்சு

(சென்னை)

கச்சதீவு பகுதியில் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமை தொடர்பாக இந்திய இலங்கை அரசுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் கடல் வலய தடைச்சட்டம் தொடர்பாக இந்திய அரசு இலங்கையிடம் கவலை தெரிவித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அதே வேளை இரு நாடுகளும் ஏற்கக்கூடிய சுமுகமான தீர்வொன்று விரைவில் எட்டப்படுமென்று நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலசல கூடங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை அதன் எல்லைக்குட்பட்ட வறிய குடும்பங்கள் மற்றும் தொற்று நோய்கள் எளிதில்பரவக்கூடிய சூழலில் வசிக்கும் குடும்பங்களிற்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்கான உதவி யுனிசெப் உதவித் திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதனை கொண்டு சுமார் 50 இதற்கும் மேற்பட்ட மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இதற்கான நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## விளையாட்டு விழா

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பாலர் யடசாலைகளிடையிலான விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.


யாழ்ப்பாணம். 28 09-93 [சி-7517]


## நினைவு கூருகின்றோம்......

**1993-09-30**

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலையில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு வீசுவமடு - கல்மடு பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சுதா** (சுப்பிரமணியம் திருச்செல்வம் - குமரபுரம் - கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு யாழ் - தீவகம் ஊர்காவற்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சரத்பாபு** (சுந்தரலிங்கம் சந்திரகுமார் - துன்னாலை வடக்கு- பருத்தித்துறை

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள். 40-ம் கட்டை சிறிலங்கா அதிரடிப்படை முகாம கடலோரம் சடலங்களாகக் கரையொதுங்கிய 04 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஐயங்கேணி, செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டு - அம்பாறை எல்லைப் பகுதியான 13-ம் கிராமத்தில் சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட வெறியாட்டத்தின்போது படுகொலை செய்யப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டுக் காணாமலும் போன இளம் பெண்கள், இளைஞர்கள் மற்றும் தந்தை அவரது பிள்ளைகள் நால்வர் உட்பட பல தமிழர்கள்.

1992-ஆம் ஆண்டு பதவியா - பராக்கிரமபுரம் பகுதியில் அமைந்துள்ள கோங்வேவ இராணுவ மினிமுகாமை தாக்கியழித்த போது வீரச்சாவெய்திய,

**லெப். விகடன்** (சாமிநாதன் இலங்கநாதன் - கள்ளப்பாடு - முல்லைத்தீவு)

**சோமான்** (சிவராசா சிவரூபன் - 4-ம் கண்டம். கற்சிலைமடு - ஒட்டிசுட்டான்)

**கப்டன் அத்தி** (கணபதிப்பிள்ளை விஜயசேனன் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் வேங்கைமாறன் / ஞானசேகர்** (சீமான் சூசை லீபேரரூஸ் எற்றிசிங் - மன்னார்)

**லெப். அரவிந்தன்** (தங்கவேல் ரவி - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய அகோர விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட திருமலையைச் சேர்ந்த கணவர், மனைவி, மகன் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர். உட்பட 04 தமிழர்கள்.

கட்டைக்காடு முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் மருதங்கேணிப்பகுதியில் வீழ்ந்து வெடித்த அதிர்ச்சியில் பலியான ஒரு குடும்பஸ்தர்,

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7514)

மீனவர் பிரச்சினை பற்றி ஆராய

# தமிழக தலைமை செயலாளருக்கு புதுடில்லி அவசர அழைப்பு

(சென்னை)

இந்திய மீனவர்களை இலங்கைக்கடற்படையினர் தொடர்ந்து தாக்கிவரும் பிரச்சினைக்கு தீர்வுகாண மாநில அரசு தலைமைச் செயலாளர் டி. பி வெங்கட் ராமனுக்கு புதுடில்லிக்குவர அழைப்பு விடப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த திங்கட்கிழமை சென்னையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் மேலும் கூறுகையில் தமிழக மீனவர்மீது. இலங்கைகடற்படையினர்தொடர்ந்து தாக்கி வருவது குறித்து பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்குதாம் எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து மத்திய உள்துறைச் செயலாளருடன் பேச்சு நடத்த தமிழக தலைமைச் செயலாளருக்கு அழைப்பு விடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மத்திய அரசு விரைவில் தகுந்த நடவடிக்கை எடுத்து இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டு உள்ளார்.

நாகபட்டினம் பகுதியில்

## மீனவர் ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு

இருவர் பலி; மற்றும் பலர் காயம்

[சென்னை]

தமிழ்நாடு நாகை காயிதே மில்லத் மாவட்டத்தின் நாகபட்டினம் மற்றும் நாகூர் பகுதிகளில் மீனவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது மீனவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் காயமடைந்து உள்ளனர்.

பாக்குநீரிணைப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டிக்கும் வகையில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபா வீதம் வழங்கவும், காயமடைந்தவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாநில அரசின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழனி மக்களவை தேர்தல் அ.தி.மு.க. வெற்றி

உத்தியோகபூர்வ அறிவிப்பு

(சென்னை)

பழனி மக்களவை தொகுதிக்கான இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மக்களவையில் அதன் பலம் 12 ஆக உயர்ந்துள்ளது. பழனி மக்களவை இடைத்தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் நண்பகல் தேர்தல் கமிஷனால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

அ. தி. மு. க. வேட்பாளர் குமாரசாமி தமக்கு அடுத்தபடியாக தி.மு.க வேட்பாளர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசனை விட 44,885 வாக்குகள் கூடுதலாக பெற்றார். அ. தி. மு. க வேட்பாளர் குமாரசாமி 2 லட்சத்து 78 ஆயிரத்து 958 வாக்குகளும், தி.மு.க வேட்பாளர் சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் 2 லட்சத்து 34 ஆயிரத்து 70 வாக்குகளும், காங்கிரஸ் வேட்பாளர் வேணுகோபால் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 626 வாக்குகளும் பெற்றனர்.

பழனி தொகுதி அறிவிக்கப்பட்ட 1976ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சி கூட்டணியாக இத்தொகுதியில் வெற்றி பெற்று வந்தமையும் இம்முறை தனித்து போட்டியிட்டு இத்தொகுதியில் தோல்வி கண்டதும் குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்காவக்கு எதிரான

## பொருளாதார தடையை நீக்க அமெரிக்க, கனடா நடவடிக்கை

(ஜோகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் அனைத்தையும் அமெரிக்காவும், கனடாவும் விலக்கிக் கொண்டதையடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

ஆயினும் தென் ஆபிரிக்க அரசு ஒன்று அமைக்கப்படும்


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

**பதவி வெற்றிடம்**

கீழே குறிக்கப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து 1993. 10. 20-ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப் படும்.

பதவி: ஆய்வுகூடக் கவனிப்பாளர் (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)
சம்பளம்: ரூபா 3, 815/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தகைமைகள்:
1) எட்டாம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2) ஆய்வுகூடச் சாதனங்கள், ஆய்வு கருவிகள் பொதுவான பயன்பாட்டில் உள்ள இரசாயனப் பொருட்கள் பற்றிய அறிவு உடையவராக இருத்தல்


## தூரதிருஷ்டி மற்றும் திறமை அரசியல்வாதிகளிடம் இல்லை

- கொர்பச்சேவ் தெரிவிப்பு

(மிலான்)

அரசியல்வாதிகளுக்கு தூரதிருஷ்டி இல்லை என்றும் தங்கள் நடவடிக்கையினால் ஏற்படும் விளைவுகளை மதிப்பீடு செய்யும் திறமை அவர்களுக்கு இல்லை என்றும் சோவியத்தின் முன்னாள் அதிபர் கொர்பச்சேவ் தெரிவித்தார்.

உலகின் பிரதான மதங்களைச் சேர்ந்த முந்நூறு மதத் தலைவர்களும், பிரதிநிதிகளும் அடங்கிய மாநாடு ஒன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், கெடுபிடி யுத்தம் முடிவுற்றதால் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சர்வதேசப் பிளவுகளைத் தீர்க்காமல் உலக அரசியல்வாதிகள் சந்தர்ப்பத்தை வீணாக்கிக் கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

சூழல் பாதுகாப்பு போன்ற அபாயகரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சந்தர்ப்பம் தவறவிடப்பட்டு வருகிறது என்றும் எண்ணற்ற உச்சி மாநாடுகள், உடன்படிக்கைகள் ஆகியன இடம்பெற்றிருக்கின்ற போதிலும் எதுவுமே செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஐ.நா. போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் தங்கள் அங்கத்துவ நாடுகள் அனைத்தினதும் நலன்களைப் பிரதிநிதித்துவபடுத்தும் வகையில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் தமக்கு இனியும் புரட்சியில் நம்பிக்கை இல்லை என்றும் தெரிவித்தார்.

## கடவுச்சீட்டுக்கள் பறிமுதல் செய்ய உத்தரவு

(மாஸ்கோ)

ரஷ்யப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களைப் பறிமுதல் செய்யுமாறு ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் உத்தரவு பிறப்பித்து உள்ளார். கலைக்கப்பட்டுள்ள பாராளுமன்றப் பிரதிநிதிகள் வெளிநாடுகளுக்கு செல்லாமல் தடுக்கும் பொருட்டே ஜனாதிபதி யெல்ட்சின் இந்த உத்தரவுகளை பிறப்பித்திருப்பதாக கூறப்படுகிறது.


**31-வது நாள் நினைவஞ்சலி**



தாயின் மடியில்
24-12-1982
ஓம்
இறைவன் அடியில்
31-08-1993

செல்வன்
**குணரத்தினம் ஜெயகாந்**

எமது அன்புச் செல்வமே - நீ
எங்கே தான் சென்றனையோ?
உன் பசுமை நினைவால் - நாம்
தினமும் ஏங்கித் தவிக்கின்றோம்...

ஏங்கித் தவிக்கும்,
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தங்கை, அம்மம்மா,


## சுதந்திர நாடுகள் அமைப்பில் ஜோர்ஜியா இணைந்து கொள்ளாது

[ரிப்பிசிலி]

பொதுநலவாய சுதந்திர நாடுகள் அமைப்பில் தமது நாடு சேர்ந்து கொள்ளாது என்று ஜோர்ஜியாவின் அதிபர் எட்வர்ட் ஷெவர்நாட்சே அறிவித்துள்ளார்.

ரிப்பிசிலியில் நடைபெற்ற அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் ஆப்காசிய கிளர்ச்சியாளர்களிடமிருந்து சுக்குமி நகரத்தைக் காப்பாற்ற ரஷ்யா மறுத்துவிட்டதால் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்

இதனிடையே ஆப்காசிய தலைநகரைக் கைப்பற்றிய பின்னர் அரசாங்கத் துருப்புகள் அந்த நகரை நோக்கி மேலதிகமாக சென்றுகொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.


**ஐஸ்கிறீம் பிரியர்களே!!**

தேனிலும் இனிமையான மல்லிகா கிறீம் ஹவுஸ் தற்போது, குலம் கிறீம் ஹவுஸ் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருவதுடன் இன்று சமுத்திர தீர்த்தோற்சவம் சிறக்க வாழ்த்தும்

**குலம் கிறீம் ஹவுஸ்**
ஆலடிசந்தி,
மானிப்பாய்.

(சி/7518)



அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்
**மாதாந்த இசை நிகழ்ச்சி**

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர்வீதி, நல்லூர்
காலம்: 30-9-1993 வியாழன் மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5. 00—5 45 வயலின் இசை
பிரம்மஸ்ரீ ம. தாணுநாதசர்மா —வயலின்
திரு. எஸ் துரைராஜா —மிருதங்கம்
திரு. எஸ். கமலகாசன் —கடம்

5.45—6. 45 இசைக்கச்சேரி
செல்வி விஜயலக்ஷ்மி இராமலிங்கஐயர் —பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் —வயலின்
திரு. எஸ். துரைராஜா —மிருதங்கம்
திரு. எஸ். கமலதாஸ் —கடம்

6. 45—7. 15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. எஸ். நமசிவாயம், ஜே பி. அவர்கள்
2. திரு. ப. காசிலிங்கம், உரிமையாளர்: ஜனாஸ் புடைவை மாளிகை யாழ்.

தலைமையுரை: திரு எம். ஸ்ரீ விக்கினேஸ்வரன் அவர்கள் [உப- அதிபர், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி]

பிரதம விருந்தினர் உரை: டாக்டர் எம். கணேசரெட்ணம் அவர்கள்.
[சத்திர சிகிச்சை நிபுணர் யாழ். அரசினர் வைத்தியசாலை]

7. 15—8. 45 சிறப்பு நிகழ்ச்சி:

வுகள் நேற்றுமுன்தினம் நண்பகல் தேர்தல் கமிஷனால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

அ. தி. மு. க. வேட்பாளர் குமாரசாமி தமக்கு அடுத்தபடியாக தி.மு.க வேட்பாளர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசனை விட 44,885 வாக்குகள் கூடுதலாக பெற்றார். அ. தி. மு. க. வேட்பாளர் 30 ஆயிரத்து 626வாக்குகளும் பெற்றனர்.

பழனி தொகுதி அறிவிக்கப்பட்ட 1976ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சி கூட்டணியாக இத்தொகுதியில் வெற்றி பெற்று வந்தமையும் இம்முறை தனித்து போட்டியிட்டு இத் தொகுதியில் தோல்வி கண்டதும் குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான

# பொருளாதார தடையை நீக்க அமெரிக்க, கனடா நடவடிக்கை

(ஜோகானஸ்பர்க்)

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் அனைத்தையும் அமெரிக்காவும், கனடாவும் விலக்கிக் கொண்டுவிட்டன. ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவிற்கு பொருளாதாரத் தடை நடவடிக்கையை முற்றாக நீக்கும்படி ஐக்கிய நாடுகள் சபையில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதையடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளபபட்டிருப்பதாக அவை மேலும் தெரிவித்துள்ளன.

ஆயினும் தென் ஆபிரிக்க அரசு ஒன்று அமைக்கப்படும் வரை கட்டாய ஆயுதத்தடை நடவடிக்கையும், அணுஆயுத தொழில்நுட்பம் மீதானதடையும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென ஐ நா. பாதுகாப்பு சபையிடம் டாக்டர் நெல்சன் மண்டேலா வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

# அணு ஆயுதப் பரிசோதனையில் சீனா கட்டுப்பட்டே நடக்கிறது

[பீகிங்]

சீனா மீண்டும் அணுவாயுதப் பரிசோதனையில் ஈடுபட இருக்கிறது என்று வெளியாகியுள்ள செய்திகளைப் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்று சீன வெளிநாட்டமைச்சு கூறியுள்ளது.

சீனா அணுப் பரிசோதனை நடத்த இருப்பதாக அமெரிக்கா கூறிவருவது தெரிந்ததே. இந்தச் செய்தியைப்பற்றி எதுவுமே தெரியாது என்று தெரிவித்த சீன வெளிவிவகார அமைச்சு மேலும் கூறுகையில், சீன அணு ஆயுதப் பரிசோதனை தொடர்பாக மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து வருவதை அனைவரும் அறிவர் என்றும் தெரிவித்துள்ளது.

# வர்த்தகதடை நீக்குவதற்கு ஜப்பான் உதவ வேண்டும்

## – இஸ்ரேல் கோரிக்கை

(நியூயோர்க்)

இஸ்ரேல் மீதான நாற்பது வருட வர்த்தகத் தடையை அரபுநாடுகள் நீக்குவதற்கு ஜப்பான் அந் நாடுகளுடனான தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஜப்பானிய வெளியுறவு அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நியூயோர்க்கில் இரண்டு வெளிநாட்டு அமைச்சர்களும் சந்தித்தபோது இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில், அவர் மேலும் தெரிவிக்கையில், காஸா பகுதிகளிலும், ஜோர்தான் மேற்குக் கரையிலும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள ஜப்பான் நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

# ஈராக் அதிபர் சதாம் என்ன கருதி இருக்கக் கூடும்

## அரபாத்திடம் புஷ் கேள்வி

இஸ்ரேலிய பாலத்தீனிய ஒப்பந்தம் தொடர்பாக ஈராக் ஜனாதிபதி சதாம் உசைன் என்ன கருதியிருப்பார்?

இந்தக் கேள்வியை அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ். பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்திடம் வினவினார். இதற்கு பதிலளித்த அரபாத் சதாம் உசைன் இதனை வரவேற்கவில்லை ஆயினும் அவர் இது விடயத்தில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கப் போவதும் இல்லை எனத் தெரிவித்தார்.

---

கர்களிடம் இருந்து 1993. 10. 20-ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி: ஆய்வுகூடக் கவனிப்பாளர் (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)

சம்பளம்: ரூபா 3, 815/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தகைமைகள்:

1) எட்டாம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2) ஆய்வுகூடச் சாதனங்கள், ஆய்வு கருவிகள் பொதுவான பயன்பாட்டில் உள்ள இரசாயனப் பொருட்கள் பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு: பொது உளச்சார்பு பரீட்சை மூலமும் நேர்முகத் தெரிவு மூலமும் மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா20/-ஐ நிதிக் கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா20/-க்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23 x 10ச.மீ அளவுடையதும் சுயமுகவரி இடப்பட்டதும் ரூபா1/-முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களைத் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் இப் பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளையில் இருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் குறிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993. 09. 23.

(சி/7515)

---



24-12-1982

ஓம்

இறைவன் அடியில்

31-08-1993

செல்வன்

## கனகரத்தினம் ஜெயகாந்

எமது அன்புச் செல்வமே - நீ
எங்கே தான் சென்றனையோ?
உன் பசுமை நினைவால் - நாம்
தினமும் ஏங்கித் தவிக்கின்றோம்...

ஏங்கித் தவிக்கும்,
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தங்கை, அம்மம்மா.

இன்றைய தினம் [30-09-1993] சாவகச்சேரியிலுள்ள எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்குபற்றும்வண்ணம் ஊரார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. கனகரத்தினம் (கனகு) குடும்பம்,
"கனகு கராச்"
பலாலி வீதி,
திருநெல்வேலி.

கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
30-09-1993

[6131]

---

# நினைவஞ்சலி



மண்ணில்

04. 04. 1944

விண்ணில்

16. 08. 1993

செல்வி

## லோகராணி கந்தையா

(வங்கிச்சேவை முகாமையாளர்,
பதில் பொதுமுகாமையாளர்)

செல்வி லோ. கந்தையா எமது சங்கத்தில் 1 5. 1973 தொடக்கம் நல்வழி காட்டியாயும், தலைசிறந்த ஊழியராகவுமிருந்து சங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் ஆற்றிய சேவைகள் மகத்தானவை.

அவரின் மறைவு எம்மெல்லோருக்கும் பேரிழப்பாகும். அவர் மறைந்த 47ஆம் நாளில் நாம் அவருக்கு அஞ்சலி செலுத்தி அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
நல்லூர் ப.நோ.கூ. சங்கம்,
திருநெல்வேலி.

30.09.93 [சி-7516]

---

நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00—5 45 வயலின் இசை

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ ம.தாணுநாதசர்மா | —வயலின் |
| திரு.எஸ் துரைராஜா | —மிருதங்கம் |
| திரு.எஸ். கமலகாசன் | —கடம் |

5.45—6. 45 இசைக்கச்சேரி

| | |
|---|---|
| செல்வி விஜயலக்ஷ்மி இராமலிங்கஐயர் | —பாட்டு |
| திரு.எஸ். கோபிதாஸ் | —வயலின் |
| திரு.எஸ். துரைராஜா | —மிருதங்கம் |
| திரு.எஸ். கமலதாஸ் | —கடம் |

6. 45—7. 15 மங்கள விளக்கேற்றல்

1. திரு.எஸ். நமசிவாயம், ஜே பி. அவர்கள்
2. திரு.ப.காசிலிங்கம், உரிமையாளர்: ஜனாஸ் புடைவை மாளிகை யாழ்.

தலைமையுரை: திரு எம். ஸ்ரீ விக்கினேஸ்வரன் அவர்கள் [உப- அதிபர், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி]

பிரதம விருந்தினர்உரை: டாக்டர் எம்.கணேசரெட்ணம் அவர்கள்.
[சத்திர சிகிச்சை நிபுணர் யாழ். அரசினர் வைத்தியசாலை]

7. 15—8. 45 சிறப்பு நிகழ்ச்சி:

பரதநாட்டியம்

வழங்குபவர், நாட்டியக் கலைமணி
நடனகலா வித்தகர் மைதிலி அம்பலவாணர் அவர்கள்

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் 24-10-93 விஜயதசமி அன்று மாலை 3. 00—5 00 மணி வரை புதிதாக இசைகற்க சேர விரும்புவோருக்கு நாள் வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பெறும். வாய்ப்பாட்டு. வயலின். வீணை மிருதங்கம், பரதநாட்டியம் சிறந்த ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்பெறும்.

**இசை ஆர்வலர்கள், அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**

மேற்படி
மன்றத்தினர்.

(6133)

---

யாழ். இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா–அறிவியலரங்கு

இடம்:- குமாரசுவாமி மண்டபம்.
காலம்:- 30-09-93 வியாழன்
நேரம்:- மாலை 3. 30 மணி

3 .30—4. 15 மணி
திரு. சசி. கிருஷ்ணமூர்த்தி
"திரைப்படக் கலைரசனை"

4. 15—5. 30 மணி
திரு. மூ. திருநாவுக்கரசு
"சர்வதேசப் பின்னணியில் இலங்கையின் புதிய அரசியல் பொருளாதாரமும் புதிய சமூக உருவாக்கமும்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

ப. மா. ச.
யாழ் இ. க.

(சி/7509)

உ
ஸ்ரீராமஜெயம்

# யாழ். வடமராட்சி
# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவ
# தேர் தீர்த்தோற்சவ சிறப்பு மலர்


தேர் 29-9-93 துன்னாலை வடக்கு - புலோலி தீர்த்தம் 30-9-93

## பக்தர்களின் பகையை நீக்க தேரேறி, பாற்கடலில் மீனாக வந்த பரந்தாமன் வருகிறான்

ஈழவள நாட்டின் சிகரமாய் விளங்கும் யாழ் குடா நாட்டின் முனையில் எழுவான் திசையில் ஸ்ரீதேவி பூதேவி சமேத மகா விஷ்ணுமூர்த்தி கோயில் கொண்டுள்ள தலமானது மூர்த்தி சக்கரமாகவும், தலம் வல்லிபுரமாகவும் தீர்த்தம் வங்காள விரிகுடாவாகவும் இப் புண்ணிய தலத்தில் ஸ்ரீவல்லிபுரேசன் தேரேறி வரும் திருநாள். அடியார்கள் கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி மாபோரை அழிக்க வல்லவர் யார்? என்று அபயக்குரல் எழுப்பும் பெருநாள். கண்ணன் அடியார்கள் பெருமான் தேரில் வரும் திருக்காட்சி கண்டு பணிந்து மெய் சிலிர்த்து பாடிக்களிக்கும் நாள் ஆண்டாண்டு தோறும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பரந்தாமன் பக்தர்கள் தேர் உற்சவ நாளில் பேரின்ப உணர்வு பெற்று திளைக்கிறார்கள். அடுத்த நாள் சக்கரதாரி பாற் சமுத்திரத்தில் தீர்த்தமாடுவான். எங்கள் பாவங்களை பார்த்தசாரதி நீக்கி விட்டான். வினைகளை நீறாக்கிவிட்டான். நாம் புனிதரானோம். பாவ விமோசனம் பெற்றோம். பாண்டுரங்கன் ஆடிய நீரில் நாமும் நீராடுவோம் தீர்த்தோம் தீர்த்தோம், எம் வினைகளை தீர்த்தோம். ஸ்ரீவல்லிபுரநாதன் தேரேறும் நாளும்

தொகுப்புரை:- திரு. ச தேவதாசன் B A.Dip-in-Hons

தீர்த்தமாடும் நாளும் வாழ்க்கையில் பெறற்கரிய புண்ணிய நாட்கள். பிறவியெடுத்தால் பெரும் பயனை இவ்விரு தினங்களிலும் பெறுகின்றோம் ஸ்ரீமந் நாராயணன் துட்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்ய பல அவதாரங்களை எடுத்துள்ளார். அதற்காகவே ஒருநாள் பாற்சமுத்திரத்தில் மீனாக அவதரித்தார். சமுத்திரம் கலங்கியது கொந்தளித்தது கடலோரமாக வாழ்ந்த கடலோடிகள் மீனைப்பிடிக்க முயன்றனர் அவர்கள் சென்ற மரக்கலங்கள் நீரினுள் அமிழ்ந்தன. கரையோரமாக பெருந்திரளாக மக்கள் நாராயணன் புகழ் பாடி நின்றனர். லவல்லி என்ற பெண் கோபாலனுடைய தியானத்தில் இருந்தாள். அவள் முன்பு செய்த தவப்பயனாக அந்தபயங்கரமான பெரிய மீனாக கடல்கலக்கிய மச்சவதாரி சிறிய உருவில் அவள் மடியில் வீழ்ந்து குழந்தையாக மாறினான். அவள் புனிதையானாள். அவளுக்கிருந்த நாகசாபம் நீங்கியது. பின்பு சக்கர வடிவமாக மாறியவனை பல்லக்கில் வைத்து கற்கோவளம் கப்பல் ஓட்டிகள் காவிவந்தனர். கோவிந்தன் பல்லக்கில் இருந்து கீழே விழுந்து துன்னாலை புலோலி என்ற கிராமங்களுக்கிடையில் இருந்த ஸ்ரீவல்லிபுரத்தையே தனது திருநகரியாக்கினான். அங்கே தன்னைத் தானே பிரதிட்டை செய்தான். அந்த புனித நாட்களே தேரேறும் நாளாகவும் தீர்த்தமாடும் நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றன தேரேறும் திருமாலுக்கு மங்கள தீர்த்தமாடி வினை தீர்க்கும் திருமகள் நாயகனுக்கு மங்களம்; ஸ்ரீ வல்லிபுரேசனுக்கு மங்களம்.



மலர் தயாரிப்பு:
தி. ஜெயக்குமார், இ. ஜெகன் தொண்டர்கள்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்

## ஆசியுரை

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை

"கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில்
வருகின்றான்"

கநக ரஜித சக்கரம் பாஸுராரம்ய சக்கரம்
கிரிவர சக்கரம் கேசவ ஸ்வாமி சக்கரம்
அசுர நிதன சக்கரம் காவ தண்டாக்கினி சக்கரம்
பவது பவது சக்கரம் பாந்தவோ
விஷ்ணு சக்கரம்!

எல்லாம் வல்ல எம்பெருமான் வருடாந்த மஹோற்சவம் 15. 9. 93 புதன்கிழமை முதல் சிறப்பாக நடைபெற்று வருகின்றது இன்றைய தினம் பெருமானின் இரதோற்சவம் தீர்த்தோற்சவம் வழமை போல் சிறப்பாக நடைபெறுகின்றது. இன்றைய கால கட்டத்திலும் பெருந்திரளான பக்தர்கள் இந்தத் திருவிழாவிற்கு வருகை தந்து தங்களுடைய இன்னல்கள் துன்பங்கள் நீங்கவும் சுபீட்சமான சுதந்திர வாழ்வும் கிடைக்க வேண்டுமென எம்பெருமான் ஸ்ரீசக்கராழ்வாரை இறைஞ்சி நிற்கின்றார்கள். ஆகவே சகல மக்களும் இன்புற்று இருக்க வேண்டுமென ஸ்ரீமன் நாராயணனை வேண்டியும் இரதோற்சவம் மற்றும் தொடர்ந்து வரும் தீர்த்தோற்சவங்களும் சிறப்பாக நடைபெறவும் என நல்லாசிகளை கூறிக்கொள்கின்றோம்,

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை
பிரம்மஸ்ரீ ச.க.புருசோத்தம குருக்கள்
,, ச.க. சுதர்சன குருக்கள்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்

சிவகௌரி
நகை மாளிகை
உரிமையாளர்: பா. சிவநேசன்
பிரதான வீதி, பருத்தித்துறை.


தரன் நகை மாளிகை
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

"புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே புருசோர்த்தமன்புகழ் பாடுங்களே வண்டாடும் கங்கைமலர் தோட்டங்களே எங்கள் பரந்தாமன் மெய் அழகை பாருங்களே"

வங்காள விரிகுடா சமுத்திரத்தில் மச்சவதாரம் எடுத்த ஸ்ரீமன் நாராயணனின் பௌர்ணமி நாளாகிய இன்று தீர்த்தமாடும் கண்ணனை

"கண்ணா கண்ணா என்றதும் ஓடியோடி வருவான் வல்லிபுரக்கண்ணன்"
ரிஷி ரெக்ஸ்
யாழ் வீதி, வல்வெட்டித்துறை

களை எடுத்துள்ளார். அதற்காகவே ஒருநாள் பாற்சமுத்திரத்தில் மீனாக அவதரித்தார். சமுத்திரம் கலங்கியது கொந்தளித்தது கடலோரமாகவாழ்ந்த கடலோடிகள் மீனைப்பிடிக்க முயன்றனர் அவர்கள் சென்ற மரக்கலங்கள் நீரினுள் அமிழ்ந்தன. கரையோரமாக பெருந்திரளாக மக்கள் நாராயணன் புகழ் பாடி நின்றனர். லவல்லி என்ற பெண் கோபாலனுடைய தியானத்தில் இருந்தாள். அவள் முன்பு செய்த தவப்பயனாக அந்தபயங்கரமான பெரிய மீனாக கடல்கலக்கிய மச்சவதாரி சிறிய உருவில் அவள் மடியில் வீழ்ந்து குழந்தையாக மாறினான். அவள் புனிதையானாள். அவளுக்கிருந்த நாகசாபம் நீங்கியது. பின்பு சக்கர வடிவமாக மாறியவனை பல்லக்கில் வைத்து கற்கோவளம் கப்பல் ஓட்டிகள் காவிவந்தனர். கோவிந்தன் பல்லக்கில் இருந்து இழே விழுந்து துன்னாலை புலோலி என்ற கிராமங்களுக்கிடையில் இருந்த ஸ்ரீவல்லிபுரத்தையே தனது திருநகரியாக்கினான். அங்கே தன்னைத்



மலர் தயாரிப்பு:
தி. ஜெயக்குமார், இ. ஜெகன் தொண்டர்கள்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்

இன்றைய தினம் பெருமானின் இரதோற்சவம் தீர்த்தோற்சவம் வழமை போல் சிறப்பாக நடைபெறுகின்றது. இன்றைய கால கட்டத்திலும் பெருந்திரளான பக்தர்கள் இந்தத் திருவிழாவிற்கு வருகை தந்து தங்களுடைய இன்னல்கள் துன்பங்கள் நீங்கவும் சுபீட்சமான சுதந்திர வாழ்வும் கிடைக்க வேண்டுமென எம்பெருமான் ஸ்ரீசக்கராழ்வாரை இறைஞ்சி நிற்கின்றார்கள். ஆகவே சகல மக்களும் இன்புற்று இருக்க வேண்டுமென ஸ்ரீமன் நாராயணனை வேண்டியும இரதோற்சவம் மற்றும் தொடர்ந்து வரும் தீர்த்தோற்சவங்களும் சிறப்பாக நடைபெறவும் என நல்லாசிகளை கூறிக்கொள்கின்றோம்,

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை
பிரம்மஸ்ரீ ச.க. புருசோத்தம குருக்கள்
,, ச.க. சுதர்சன குருக்கள்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்

---


**சிவகௌரி**
நகை மாளிகை
உரிமையாளர்: பா. சிவநேசன்
பிரதான வீதி, பருத்தித்துறை.

**மலர்ஸ் பாத அணி**
வியாபாரம்
நெல்லியடி - கரவெட்டி

**புதிய இதையன்**
நெல்லியடி, கரவெட்டி

**சுபாஸ் பேக்கரி**
நெல்லியடி - கரவெட்டி

**சுதர்சனம்**
விற்பனையகம்
நெல்லியடி - கரவெட்டி

**ஜமுனா**
பலசரக்கு வியாபாரம்
நெல்லியடி - கரவெட்டி

சிறந்த படப்பிடிப்பாளர்கள்
**குகன் ஸ்ருடியோ**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**மதிசுதன்**
அழகு சாதன அங்காடி
மந்திகை, பருத்தித்துறை.

**தரன் நகை மாளிகை**
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
மக்கள் சந்தை, பருத்தித்துறை

**ஆனைமுகன்**
பிடைவை மாளிகை
நெல்லியடி, கரவெட்டி
தலைமை ஸ்தாபனம்
பாபு குட்லக் எம்போரியம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

**பரந்தாமன் எலற்றிக்கல்**
யாழ். வீதி, மந்திகை

''கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகிறான் கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்''
**ராகுல சூரியன்ஸ்**
புடைவை மாளிகை
பிரதான வீதி, பருத்தித்துறை.

காக்கும் கடவுள் கண்ணனின் தீர்த்தோற்சவம் சிறக்க வாழ்த்தும்
**செல்லமுத்தூஸ்**
புடைவை மாளிகை
நெல்லியடி – கரவெட்டி

''புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே புருசோர்த்தமன்புகழ் பாடுங்களே வண்டாடும் கங்கைமலர் தோட்டங்களே எங்கள் பரந்தாமன் மெய் அழகை பாருங்களே''
**சிவா ரேடிங் கோ.**
பஸ் நிலையம், பருத்தித்துறை.

**ஜெயாஸ் தங்க மாளிகை**
தங்க நகை வியாபாரம்
443, பிரதான வீதி, பருத்தித்துறை

''பாஞ்சாலி புகழ்காக்க தன்னைக் கொடுத்தான் அன்று பாரதப் போர் முடிக்க சங்கை எடுத்தான் பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கை கொடுத்தான் நாம்படிப்பதற்கு கீதை எனும் பாடம் கொடுத்தான்''
**சுசீலா ஆபரண மாளிகை**
தங்க நகை வியாபாரம்
258, பிரதான வீதி, பருத்தித்துறை.

காப்பதற்கு கையிலேந்தும் சங்கு சக்கரம் தாங்கிய கண்ணன் இன்று சமுத்திர நீராடுகின்றார்.
**றியோ கிறீம் ஹவுஸ்**
பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

''நீலமேனி கோலம் காண... என் கண்கள் மறுக்குமோ''
**ஐயப்பா**
புடைவை மாளிகை
யாழ் வீதி, வல்வெட்டித்துறை.

வங்காள விரிகுடா சமுத்திரத்தில் மச்சவதாரம் எடுத்த ஸ்ரீமன் நாராயணனின் பௌர்ணமி நாளாகிய இன்று தீர்த்தமாடும் கண்ணனை போற்றும்,
**ராஜன் சைக்கிள் வேக்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

அதர்மம் எங்கே தாண்டவம் ஆடுகிறதோ அங்கே அவதாரம் எடுப்பேன் என்ற கண்ணன் இன்று தீர்த்தமாடும் திருநாள்.
**சிந்துயா நகை மாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**தீன்சுவை**
பாண் உற்பத்தி
இறங்குதுறை வீதி, பருத்தித்துறை.

படிப்பதற்கு கீதை சொன்ன கண்ணன் வருகிறான்
**ஈஸ்வரி நகை அகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

''அவன் நிமிர்ந்த தோளும் அகண்ட மார்பும் நெஞ்சம் மறக்குமோ
**இமையவன் ஸ்ரோர்ஸ்**
மக்கள் சந்தை, பருத்தித்துறை.

''கண்ணா கண்ணா என்றதும் ஓடியோடி வருவான் வல்லிபுரக்கண்ணன்''
**றிஷி ரெக்ஸ்**
யாழ் வீதி, வல்வெட்டித்துறை.

''எங்கு நோக்கிலும் என்ன கேட்கிலும் என்னைக் காணலாம் என்றாய் நாங்கள் ஒன்று நோக்கிறோம் ஒன்று கேட்கிறோம் உன்னை மட்டுமே கண்ணா''
**குமாரி ஸ்ரோர்ஸ்**
மக்கள் சந்தை, பருத்தித்துறை.

''பார்த்தனுக்கு பாடம் சொன்ன கீர்த்தன் வருகிறான்''
**வாணி நகை மாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை.

பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனின் சமுத்திர தீர்த்தோற்சவம் இன்று.
**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
மக்கள் சந்தை, பருத்தித்துறை

''ஹரி ஓம் நமோ நாராயண''
**லக்ஷ்மி நகை மாளிகை**
மருதடி, பருத்தித்துறை.

தரமான பாண் உற்பத்தியாளர்கள்
**சிற்றி பேக் ஹவுஸ்**
தும்பளை, பருத்தித்துறை.

சிந்தனைக்கு

அனுபவம் கண்டிப்பான ஆசான்,
பரீட்சையை முதலில் நடத்திவிட்டு,
பாடத்தைப் பிறகே சொல்லிக் கொடுக்கும்.

— வெர்னான் ஸேண்டர்ஸ் லா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-09-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகப்பீடம் [illegible]

த. பெ. எண்-05

# அங்கீகாரம் பெற்ற இனப் படுகொலைகள்

சிறிலங்கா விமானப்படை மற்றுமொரு கொடூரத்தை நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டில் நிகழ்த்தியுள்ளது. விமானப்படை நடத்திய இக் கண்மூடித்தனமான தாக்குதலினால் பதுங்குகுழியில் இருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட 20 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதேபோல், கோவிலில் தஞ்சமடைந்திருந்த மூன்று பெண்களும் உடல் சிதறிப் பலியாகினர். இருபத்தைந்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

சிறிலங்கா விமானப்படை நடத்திய இத்தாக்குதல்கள் எந்தவிதத்திலும் நியாயப்படுத்தப்படமுடியாதவை. இது திட்டமிட்ட இனப் படுகொலையின் ஓர் அம்சம். நேற்று முன்தினம் காலை ஊரடங்குச் சட்டத்தை அறிவித்த சிறிலங்கா அரசாங்கம் கோவில்களில் மக்களைத் தஞ்சமடையுமாறு கூறிவிட்டு கோவில் மீது தாக்குதல் நடத்தியதைத் திட்டமிட்ட படுகொலை என்று கூறாமல் வேறு எவ்வாறு கூறமுடியும்? குண்டு வீச்சிற்கு அஞ்சி பதுங்குகுழியில் அடைக்கலம் அடைந்த ஏதுமறியா குழந்தைகளையும், பெண்களையும் குண்டு வீசிக் கொல்வதென்பது எந்தவகையைச் சார்ந்தது?

ஆனால், சிறிலங்கா அரசும், இராணுவமும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளும் ஈவிரக்கமற்ற இப்படுகொலைகள் புதியதொரு விடயமல்ல. பல வருடங்களாக இவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருபவைதான். ஆனால், இப்படுகொலைகள் இடம்பெற புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இனப்பிரச்சினை தொடர்பாகப் பிரகடனப்படுத்தியுள்ள கொள்கைகளும், ஆயுதப்படையினருக்கு வழங்கியுள்ள அனுமதிகளும் உற்சாகம் ஊட்டுபவை என்பதிலும் சந்தேகமில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்' மூலம் படுகொலைகளுக்கு சட்ட அந்தஸ்து அளித்தார். அவருக்கு அடுத்து வந்த ஜனாதிபதி பிரேமதாசா சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையிலேயே படுகொலைகளுக்கு அங்கீகாரம் வழங்கினார். தற்பொழுதுள்ள ஜனாதிபதியோ தமிழர்கள் அனைவ

# இராணுவத்திலிருந்து ஓடியோருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும்

## சு. க. எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய பத்தாயிரம் பேரையும் மன்னிப்பு வழங்கியோ, நிபந்தனைகள் விதித்தோ மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது இளைஞர் விவகார அமைச்சு இவர்களுக்கான திட்டம் எதையாவது தயாரிக்க வேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்று சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் சட்ட மூலம் ஒன்றின் மீதான இரண்டாவது வாசிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தப் பத்தாயிரம் பேரும் இந்த நாட்டின் இளைஞர் அணியினர். இவர்களது பிரச்சினையைக் நாம் அலட்சியமாக இருந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை செய்தார்.

என் கழுத்தில் சுருக்கு கயிறு

# இழுக்கிறார்களும் இல்லை விடுவிப்பதாகவும் இல்லை

— அநுரா தெரிவிப்பு

என் கழுத்தில் சுருக்குப் போட்டுள்ளனர். ஆனால் அதை இழுக்கிறார்களுமில்லை; விடுவிக்கிறார்களுமில்லை இவ்வாறு சுதந்திரக் கட்சியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்க எம். பி தெரிவித்தார். வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு அண்மையில் நாடு திரும்பிய அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் இதனைக் குறிப்பிட்டார்.

## ஊதியங்கள் இன்றி [illegible] பாடசாலை

தீவக மக்கள் தங்கியிருக்கும் அயாலை சாம்சன் குடியிருப்பில் இயங்கிவரும் சாம்சன் மாணவர் பாடசாலையில் பாடம் கற்பிக்கும் மூன்று ஆசிரியைகளும் பயிலும் 53 சிறார்களும் இருப்பதற்கு கதிரையோ மேசையோ ஒன்று கூட இல்லையென்றும், சிறார்கள் நிலத்தில் இருக்க ஆசிரியைகள் நின்ற நிலையிலேயே பாடம் சொல்லிக் கொடுப்பதாகவும் சிறார்களுக்கு வழங்கப்பட்டு வந்த சத்துணவுகூட திடீரென நிறுத்தப்பட்டதனால் பாடசாலைக்கு வரும் சிறார்களின் தொகை குறைவடைந்துவருவதாகவும் மேற்படி பாடசாலையின் ஆசிரியைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (22)

# மக்களின் வாக்குக்கு மதிப்பளித்து சந்திரசேகரனை விடுவியுங்கள்

— அஷ்ரப் கோரிக்கை

(கொழும்பு)

மலையக மக்கள் தமது வாக்குகளின் மூலம் மாகாண சபையில் குரல் எழுப்புவதற்கு தமது பிரதிநிதியாக சந்திரசேகரனைத் தெரிவு செய்திருக்கிறார்கள். இந்த மக்களுக்கு மதிப்புக் கொடுத்து சந்திரசேகரன் விடுதலை செய்யப்பட்டு பதவிப் பிரமாணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். எம் அஷ்ரப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

தேயிலை ஆராய்ச்சி சபை சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இலங்கைக்கு பெருமளவு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் தேயிலைத் தோட்டங்களிலே வியர்வை சிந்தும் உழைக்கும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விசேட நிதியம் உருவாக்கப்பட வேண்டும். அந்த மக்களின் குடியிருப்புகள் மிகவும் மோசமானவை. பாடசாலைகள் இங்கு மாட்டுத் தொழுவங்களிலேயே நடத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

# நகைக்கடை தொழிலாளர் பாணந்துறையில் கைது

(கொழும்பு)

பாணந்துறை நகரிலுள்ள ஜனப்பிரிய மாவத்தையிலுள்ள நகைக்கடை ஒன்றில் வேலை செய்த மூன்று தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் வேவு பார்க்கும் பிரிவைச் சேர்ந்த சிலர் இப்பகுதிகளில் நடமாடி வருவதாகப் பொலிசாருக்கு தகவல் கிடைத்ததாகவும், அதனைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# ஆட்சி கவிழ்ப்பு சதி முயற்சியில் ஐ.தே.க ஈடுபட்டுள்ளது

— திருமதி சந்திரிகா புகார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சதி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக [illegible] இப்போது தமது ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். [illegible]

# வன்னேரிக்குளம் மக்களுக்கு ப. வெல்ல உற்பத்தி மானியம்

(யாழ்ப்பாணம்)

வன்னேரிக்குளம் பகுதி மக்கள் குடிசைக் கைத்தொழிலாக பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விதத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மானியங்களை வழங்கியிருக்கிறது.

கிளிநொச்சிக் கோட்டத்தில் இருக்கும் இக்கிராமத்தில் நீண்டகாலமாக முழுமையான பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாதிருந்த பனை வளத்தை அவதானித்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் பனைவளம் பற்றி அறிவுறுத்தி உற்பத்திக்கு ஆர்வம் ஊட்டியதைத் தொடர்ந்து இப்பகுதியில் பனை வெல்லம் உற்பத்தி குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படலாயிற்று.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்தி சபை போன்ற நிறுவனங்களுக்கே வழங்கப்பட்ட இம் மானியம் வன்னேரிக்குளம் கிராமத்திலேயே முதன்முறையாகத் தனிப்பட்ட பனை வெல்ல உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கழிவுநீர் வாய்க்கால்கள் மாநகர சபையால் துப்புரவு

யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தொற்று நோய்கள் வெகுவாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ்நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள கழிவு நீர்க் கான்கள் துப்புரவு செய்யும் முயற்சியில் யாழ் மாநகர சபை தீவிர கவனம் செலுத்தி வருவதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது சம்பந்தமாக நேற்று யாழ் மாநகரசபையில் நடைபெற்ற திட்டமிடல் குழுக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கொழும்பிற்கு உத்தியோகபூர்வ அலுவல்கள் காரணமாகச் சென்ற யாழ் மாநகர சபை ஆணையாளர் நேற்று முன்தினம் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

மட்டக்களப்பு பகுதியில்

# பொதுமக்களின் கடிதங்கள் பொலிசாரால் சோதனை

மட்டக்களப்பிலுள்ள பொதுமக்களுக்கு பிறமாவட்டங்களிலிருந்து வரும் கடிதங்கள் முதலில் பொலிஸ் நிலையம் எடுத்துச் செல்லப்பட்டு பரிசோதிக்கப்பட்ட பின்னரே உரியவருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இதனால் கொழும்பில் தபாலில் இடப்படும் கடிதங்கள் ஐந்து நாள் தாமதித்த பின்பே மட்டக்களப்பு வாசிக்கு கிடைப்பதாக கூறப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் கடிதங்களில் சில ஆவணங்கள் காணாமற் போவதாகவும் புகார் தெரிவிக்கின்றனர்.

சந்திரசேகரன் விவகாரத்தில்

# பொலிசாரின் நடவடிக்கைக்கு நீதிமன்றில் பலத்த கண்டனம்

(கொழும்பு)

ஆறாம் மாடி பொலிஸாரின் நடத்தை தொடர்பாகப் பாணந்துறை நீதிபதி ரி. பி. வீரசூரியா கடந்த வியாழனன்று நீதிமன்றத்தில் பலத்த கண்டனம் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பி. சந்திரசேகரன், கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பு தொடர்பாக அளித்த ஒப்புதல் வாக்குமூலம் [illegible] அறிய நடைபெறும் 'வொயர் டயர்' விசாரணையின்போது நீதிபதி வீரசூரியா இக்கண்டனத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "வழக்கு தொடுக்கப்பட்ட நிலையில் சந்திரசேகரன் எனது பாதுகாப்பின் கீழேயே உள்ளார். விசாரணை முடியும்வரை தடுத்து வைக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே உள்ளது. [illegible] டுள்ளேன். எனினும் 6ஆம் மாடி பொலிசார் இதனை உதாசீனம் செய்யும்வகையில் எனது அனுமதியின்றி அவரை ஆறாம் மாடிக்குக் கொண்டு போயுள்ளனர். இங்கு சி. ஐ. டி பொலிசாரோ, தேசிய புலனாய்வுப் பணியகப் பொலிசாரோ இருந்தாலும் எனக்கு அக்கறை இல்லை. ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்க வேண்டியது பொலிசாரின் [illegible]

மறியா குழந்தைகளையும், பெண்களையும் குண்டு வீசிக் கொல்வதென்பது எந்தவகையைச் சார்ந்தது?

ஆனால், சிறிலங்கா அரசும், இராணுவமும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளும் ஈவிரக்கமற்ற இப்படுகொலைகள் புதியதொரு விடயமல்ல. பல வருடங்களாக இவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருபவைதான். ஆனால், இப்படுகொலைகள் இடம்பெற புதிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இனப்பிரச்சினை தொடர்பாகப் பிரகடனப்படுத்தியுள்ள கொள்கைகளும், ஆயுதப்படையினருக்கு வழங்கியுள்ள அனுமதிகளும் உற்சாகம் ஊட்டுபவை என்பதிலும் சந்தேகமில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்' மூலம் படுகொலைகளுக்கு சட்ட அந்தஸ்து அளித்தார். அவருக்கு அடுத்து வந்த ஜனாதிபதி பிரேமதாசா சட்டதிற்கு அப்பாற்பட்ட முறையிலேயே படுகொலைகளுக்கு அங்கீகாரம் வழங்கினார். தற்பொழுதுள்ள ஜனாதிபதியோ தமிழர்கள் அனைவரும் 'பயங்கரவாதம்' என்ற ரீதியில் இனப்படுகொலைக்கு பூரண சுதந்திரம் அளித்துள்ளார்.

ஆனால், முன்னைய ஜனாதிபதிகளை விட தற்போதைய ஜனாதிபதியின் நிலைப்பாடு உயர்வானது என்றே கூறவேண்டும். முன்னைய ஜனாதிபதிகள், தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன, தேசியப் பிரச்சினையான அவை தீர்க்கப்பட வேண்டும் எனப் பேச்சளவில் தானும் ஒப்புக்கொண்டிருந்தனர். ஆனால், தற்போதைய ஜனாதிபதி பிரச்சினை என்பதே தமிழருக்கு இல்லை எனத் தெரிவிக்கின்றார்.

அதாவது, தமிழரின் தேசிய பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை எனக் காட்ட முற்படுகின்றார். இதன்மூலம், தமிழ்மக்கள் அனைவருக்கும் 'பயங்கரவாதிகள்' நாமம் சூட்டப்பார்க்கின்றார். இதன்மூலம், தமிழர் மீதான படுகொலைக்கு உற்சாகம் ஊட்ட முற்படுகின்றார். இவரின் இந்நிலைப்பாடு ஒரு தேசிய இனத்தை அழித்துவிடுவதற்கான அனுமதியாகும்.

டிங்கிரி பண்டாவின் இந்நிலைப்பாடு எந்தளவிற்கு சிங்களப் பேரினவாதத்திற்குப் புத்துயிர்ப்பும், எழுச்சியும் கொடுத்துள்ளது என்பதைச் சிங்கள இராணுவமும், அடிப்படைவாத பௌத்த அமைப்புக்களும் அவரின் நிலைப்பாட்டை வரவேற்றதில் இருந்தும், அவருக்கு தமது ஆதரவை வெளிப்படையாக தெரிவித்ததில் இருந்துமே புரிந்து கொள்ளலாம். அதாவது, தமிழரை முழுமையாக இனப்படுகொலை மூலம் அழித்து விடத் துடிக்கும் பேரினவாத சக்திகளுக்கு டிங்கிரி பண்டா அளித்துள்ள அனுமதியானது சந்தோசம் அளிக்காது வேறு எதை அளிக்க முடியும்? இந்நிலையில்தான் படுகாலை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகள் முதல் முதியோர் வரை படுகொலை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இனப்பிரச்சினையை படுகொலை மூலமோ அன்றி, ராணுவ நடவடிக்கைகள் மூலமோ தீர்த்து வைக்க முடியாது. அவ்வாறு தீர்த்து வைத்ததாகவும் வரலாறு இல்லை. இலங்கையில் கூட கடந்தகால இனப்படுகொலைகளும், தாக்குதல்களும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கினவே ஒழிய பிரச்சினையை தீர்வை நோக்கி நகர்த்திச் செல்லவில்லை. இராணுவ அழுத்தங்கள், படுகொலைகள் எங்கும் சுதந்திரப் போர்களை நிறுத்தியதாக இல்லை. எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. சுதந்திர அரசுகள் நோக்கியே மக்களை அவை இட்டுச் சென்றுள்ளன.

## நகைக்கடை தொழிலாளர் பாணந்துறையில் கைது

(கொழும்பு)

பாணந்துறை நகரிலுள்ள ஜனப்பிரிய மாவத்தையிலுள்ள நகைக்கடை ஒன்றில் வேலை செய்த மூன்று தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் வேவு பார்க்கும் பிரிவைச் சேர்ந்த சிலர் இப்பகுதிகளில் நடமாடி வருவதாகப் பொலிசாருக்கு தகவல் கிடைத்ததாகவும், அதனைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## ஆட்சி கவிழ்ப்பு சதி முயற்சியில் ஐ.தே.க ஈடுபட்டுள்ளது

### - திருமதி சந்திரிகா புகார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு எதிரான சதி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

மேல் மாகாண சபையில் தம்மால் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை கடுமையாக எதிர்த்த ஐ.தே.கவினர் இப்போது தமது ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதற்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சில உறுப்பினர்கள் உட்படபொது மக்கள் முன்னணியைச்சேர்ந்த இதர கட்சியின் உறுப்பினர்களோடு ஐ.தே.கவினர் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

## பிரிகேடியர்களாக 11 பேர் பதவி உயர்வு

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 11 பேர் பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். சிறிலங்கா இராணுவத்தில் பலர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து இப்புதிய பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குலதுங்க, ஹப்புஆராச்சி, வீரசூரிய, நமுனி, ஜெயவர்தனா, சமரதுங்க, பனான்டோ, ஜெயசுந்தர, வீரசேகர, பீரிஸ், திஸ்ஸரட்ன ஆகியோரே பிரிகேடியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களில் பிரிகேடியர் நமுனி யாழ்ப்பாண இராணுவ கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை சிறிலங்கா வான்படையின் பொறியியல் பிரிவில் கடமையாற்றிய ஏயர் வைஸ்மார்சல் பனான்டோ தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்

## குண்டு துளைக்காத வாகனங்கள் இராணுவத்தினரின் பாவனைக்கு

### மக்கள் வங்கி வழங்கியது

(கொழும்பு)

மக்கள் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்கள் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. தனது பணம் நகைகளை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்காக பலலட்சம் ரூபா பெறுமதியானதுப்பாக்கி ரவைகள் துளைக்காத வாகனங்கள் நான்கு மக்கள் வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் இவ்வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலையில் தற்போது இராணுவத்தினரிடம் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளைமக்கள்வங்கி தனது தேவைக்காக இத்தகையவாகனங்கள்நான்கைகொள்வனவு செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## செப்ரிசீமியாவினால் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியா நோய்க்குள்ளான ஒருவர் திங்கட்கிழமை யாழ்.போதனா மருத்துவமனையில் மரணமடைந்துள்ளார்.

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த நாகராசா (வயது 28) என்பவரே செப்ரிசீமியா நோய்க்கு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போது மரணமடைந்தவராவார். (வி)

சந்திரசேகரன் விவகாரத்தில்

## பொலிசாரின் நடவடிக்கைக்கு நீதிமன்றில் பலத்த கண்டனம்

(கொழும்பு)

ஆறாம் மாடி பொலிஸாரின் நடத்தை தொடர்பாகப் பாணந்துறை நீதிபதி ரி.பி. வீரசூரியா கடந்த வியாழனன்று நீதிமன்றத்தில் பலத்த கண்டனம் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரான பி. சந்திரசேகரன், கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பு தொடர்பாக அளித்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்புடையதுதானா என்பது பற்றி அறிய நடைபெறும் 'வோயர் டயர்' விசாரணையின்போது நீதிபதி வீரசூரியா இக்கண்டனத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "வழக்கு தொடுக்கப்பட்ட நிலையில் சந்திரசேகரன் எனது பாதுகாப்பின் கீழேயே உள்ளார். விசாரணை முடியும்வரை தடுத்து வைக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே உள்ளது. எதிரியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளேன். எனினும் 6ஆம் மாடி பொலிசார் இதனை உதாசீனம் செய்யும்வகையில் எனது அனுமதியின்றி அவரை ஆறாம் மாடிக்குக் கொண்டு போயுள்ளனர். இங்கு சி.ஐ.டி பொலிசாரோ, தேசிய புலனாய்வுப் பணியகப் பொலிசாரோ இருந்தாலும் எனக்கு அக்கறை இல்லை. ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்க வேண்டியது பொலிசாரின் கடமை" என்றும் குறிப்பிட்டார்.

### சான்றிதழ் வழங்கல்

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி பயிற்சி நெறியில் சித்தியடைந்தமாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அடுத்தமாதம் இரண்டாம் திகதி காலை9.00 மணியளவில் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

### மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளம்கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று 30ஆம் திகதி மாலை 5 மணிக்கு சட்டநாதர்வீதியில் உள்ள மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும். வயலினிசை, இசைக்கச்சேரி, பரதநாட்டியம் என்பன இடம்பெறும்.

### குருபூசை

மௌனகுரு கடவுட் சாமிகளின் வருடாந்த குருபூசை இன்று வியாழக்கிழமை, மறுவன்புலோவிலுள்ள அன்னாரது சமதி நிலையத்தில் இடம்பெறும். [09]

### பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டி

[தொல்புரம்]

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும், கட்டப்பிராய் சரஸ்வதி பாலர் பாடசாலையும் இணைந்து நடாத்தும் பாலர் விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமைநண்பகல்1.00 மணியளவில் பாலர்பாடசாலை மைதானத்தில் விளையாட்டுக் குழுத் தலைவர் கோ. பாஸ்கரன் தலைமையில்நடைபெறவுள்ளதென சர்வோதய பாலர்பாடசாலைகளின் பொறுப்பாளர் செல்வி. கா.திலகராணி தெரிவித்துள்ளார். [41]

ராஜீவ் கொலை வழக்கு

## குற்றம் சாட்டப்பட்டோர் நீதிமன்றம் செல்ல மறுப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றம் வர மறுத்து விட்டமையினால் வழக்கு அடுத்த மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கைதிகளை சந்திக்கும் அறையில் கம்பி வலைக்குப்பதில் பைபர்கிளாஸ் தடுப்பு போடப்பட்டதை ஆட்சேபித்தே இவர்கள் நீதிமன்றத்தை பகிஷ்கரித்து வருகின்றனர்.

குற்றம் சாட்டப்பட்ட 26 பேர்களில் 20 பேர் இவ்வாறு நீதிமன்றத்தை பகிஷ்கரித்து வருகின்றனர் நேற்று இவர்களை நீதிமன்றம் கொண்டு வர சிறை அதிகாரிகள் ஓரளவு பலத்தை பிரயோகித்தும் பலன் கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்காக ஒரு மணிநேரமாக காத்திருந்த நீதிபதி வேறு வழியின்றி வழக்கை ஒக்டோபர் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

ஆண் கைதிகள் தமது மேல் ஆடைகளை களைந்து விட்டு உடலில் எண்ணை பூசிக்கொண்டு நின்றனர் சிறை அதிகாரிகள் உடலை கட்டிப்பிடித்து இழுத்து செல்வதை தடுக்கவே அவர்கள் இவ்வாறு நின்றதாக தெரிவிக்கப்படுகிறது. கைதிகளை நீதிமன்றம் கொண்டுவர பலம் பயன்படுத்தப்படக்கூடாது என சட்ட விதி கூறுவதால் சிறை அதிகாரிகளால் கைதிகளை நீதிமன்று கொண்டுவரும் முயற்சி இறுதியில் தோல்வி கண்டது என தெரிவிக்கப்பட்டது.

## அரபுகளிடம் ஜெருசலேம் ஒருபோதும் இருந்ததில்லை

### – சிமோன் பெரஸ்

(நியூயோர்க்)

மத்திய கிழக்கில் சுபீட்சம் ஏற்படுவதையே தான் எதிர்பார்த்திருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது. இந்தச் சுபீட்சத்தை அடைவதற்கு அயலில் இருக்கும் நாடுகளுடன் அரசியல், சமூக, பொருளாதார ஒத்துழைப்பு மிகவும் அவசியம் ஆகும் என்று இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் சிமொன் பெரஸ் கூறியுள்ளார்

புதிய மத்திய கிழக்கு தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில். ஆயுதப்போட்டி யுத்தங்கள் பகிஷ்காரங்கள் போன்றவற்றை ஒழித்துக்கட்ட வேண்டிய தருணம் இதுவாகும் எனவும் குறிப்பிட்டார்.

நியூயோர்க்கில் பிரெஞ்டன் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், சமாதானத்திற்கான பிரதேசம் எதையும் இஸ்ரேல் விட்டுக் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

ஜெருசலேம் நகரின் எதிர்காலம் பற்றிக் கூறுகையில் அரபுக்கள் ஜெருசலேமை தமது தலைநகரமாக ஒருபோதும் கொண்டிருந்தது கிடையாது என்றும் ஜெருசலேமைப் பொறுத்தவரையில் அது எமது அரசியலும் மதமும் ஆகும் என்றும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# விமானக்குண்டு வீச்சிற்கு இந்துப்பேரவை கண்டனம்

"அப்பாவிப் பொது மக்களையும் ஆலயத்தில் சரணடைந்தவர்களையும் பலி கொண்ட சிறிலங்கா விமானப் படையினர் நேற்று முன்தினம் நடாத்திய யாழ். குடாநாட்டுத் தாக்குதல் குறித்து எமது ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம் என யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் நிகழ்ந்த அநாகரிக விமானத் தாக்குதலின் தொடர்ச்சியாக கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற தாக்குதல் அமைந்துள்ளது. இவ்வாறான அநாகரிகச் செயல்களால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை இலங்கை அரசுக்கு நாம் பலமுறை எடுத்துக் கூறியுள்ளோம். இந்துக்களின் வழிபாட்டு தலங்களையும் அப்பாவிப் பொது மக்களையும் விமானக் குண்டுகளால் தாக்குவதன் மூலம் இலங்கை அரசு தனது கையாலாகாத் தனத்தையும் மனிதாபிமானமற்ற போக்கையும் பகிரங்கப்படுத்தி வருகின்றது. அன்பு, கருணை, அகிம்சையைப் போதித்த புத்தபகவானின் வாரிசுகளான இலங்கைப் பௌத்தர்களையும் மனிதாபிமானமுள்ள இலங்கைப் பிரசைகளையும் அரசின் இந்தப் போக்கைக் கண்டிக்குமாறும் நாட்டைப் பாதிக்கும் இனப் பிரச்சினையை இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நிர்ப்பந்திக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை சமீபத்திய சிறிலங்கா விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## விமானக்குண்டுத் தாக்குதல் ஜனாதிபதிக்கு அறிவிப்பு

[நமது நிருபர்]

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியிலும் மற்றும் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் முன்பாகவும் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் சுமார் 23 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளமை சிறிலங்கா ஜனாதிபதி டீ. பி. விஜேதுங்காவிற்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இது சம்பந்தமான அவசர வானொலிச் செய்தியை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் அனுப்பிவைத்துள்ளார்.

இச்செய்தியில் மேலும் ஆலயங்களை அண்மித்து மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் மற்றும் பொது மக்கள் மீது அநியாயமாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் உடன் நிறுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. [பா]

## ஹெலி தாக்குதல் இருவர் காயம்

[கிளிநொச்சி]

குஞ்சுப்பரந்தன் பகுதியில் கடுமையான ஹெலி தாக்குதல் நடாத்தப்பட்டதில் தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று இத்தாக்குதலை நடாத்தியது.

சிவலோகநாதன் [27] என்பவரும் இவரது இரண்டு வயது மகனான சி. சுரேஷ்குமார் என்பவருமே காயமடைந்தனர்.

மேற்படி குழந்தையின்குடல் வெளியே வந்த நிலையில் அவசரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### வீரச்சாவு எய்திய
### குருபரன்

இக்கரை களபூமி காரைநகரைச் சேர்ந்த சோமசுந்தர ஐயர் குகனேசசர்மா-பூமாலக்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் குருபரன்(கு ஸ்ரீஸ்கந்தராஜாசர்மா யாழ்.காரை நகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய மாணவன்] 28-9-93 செவ்வாயன்று வீரச்சாவு அடைந்து விட்டார். இவர் சிவாஜி சர்மா (செருக்கல்பதி பிள்ளையார்கோவில் சாவகச்சேரி), சரோஜினிதேவி, சற்குணராஜா சர்மா (சித்தன்கேணி சிவன்கோவில்), சண்முகராஜா சர்மா (யாழ். கல்வித்திணைக்களம்), சரவணபவானந்தராஜா சர்மா (யாழ். பல்கலைக்கழகம் 2nd year Phy-Science), சசிகலாதேவி, சகுந்தலாதேவி (சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

(வடமராட்சி)

தோட்ட வெளியில் பட்டம் ஏற்றி விளையாடிக் கொண்டிருந்த ஆறு வயது சிறுவன் தவறுதலாக தோட்டக்கிணற்றில் வீழ்ந்து மரணமானார்.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சிறீசந்திரன் ஜனகன் என்ற சிறுவனே இவ்வாறு மரணித்தவராவார். இவரைக் காணாது தேடிய பெற்றோர் இவரும் பட்டமும் கிணற்றில் இருக்கக் காணப்பட்டு மீட்டெடுத்தனர். (யோ)

# 2 ஆவது குண்டுவீழ்ந்தது மரண ஓலம் கேட்டது

### சங்கத்தானை குண்டுவீச்சு பற்றிவிபரிக்...

(தென்மராட்சி)

விமானத்தில் இருந்து இரண்டாவது குண்டு பதுங்கு குழிக்கு அண்மையில் விழுந்ததும் சற்று நிமிடத்தில் ஒரே மரண ஓலம் கேட்டது. உடன் அந்த இடத்திற்கு அயலவர்கள் எல்லோரும் ஓடியதை அடுத்து நானும் ஓடிச் சென்றபோது பதுங்கு குழி இடிந்து காணப்பட்டது இவ்வாறு நேற்று முன்தினம் சங்கத்தானையில் 'புக்காரா' விமானங்களின் குண்டுத் தாக்குதலில் இருந்து மயிர் இழையில் உயிர் தப்பிய என். செல்லக்கண்டு என்பவர் எமது தென்மராட்சி செய்தியாளருக்கு விபரித்தார். அவர் மேலும் கூறுகையில்; புக்காரா சுற்றும் போது 20 இற்கும் மேற்பட்டோர் அப் பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்தனர் விமானத்தில் இருந்து முதலாவதாக வீசப்ப[ட்ட] குண்டினால் வீடு ஒன்று த[ரை] மட்டம் ஆகியது. அப்போ[து] நானும் எனது குடும்பத்[தின]ரும் நிலத்திலேயே படு[த்து] விட்டோம். எம் மீது ஓ[டு]தடிகள் வந்து விழுந்[தன]. இரண்டாவதாக வீசப்ப[ட்ட] குண்டு பதுங்கு குழி[யில்] விழுந்தது குண்டுத் தாக்[குதல்] முடிந்ததும் பதுங்கு குழி[யை] அயலவர்கள் எல்லோ[ரும்] கிண்டினோம். சிலர் ம[ய]... நிலைமையில் இருந்த... அவர்களின் கண் வா[ய்]... இடங்களும் மண்ணி[னால்] மூடப்பட்டு இருந்தது. உட[ன்] எல்லோரையும் சாவகச்[சேரி] மருத்துவமனைக்கு கொ[ண்டு] சென்றோம் என்றார்.

## வடபகுதிப் பயணிகளுக்கு வவுனியாவில் தடை விதிப்பு

(வவுனியா)

நேற்று வவுனியா ஊடாக வடபகுதிக்கு வெளியே சென்ற பயணிகளை ஐந்து நாட்களினுள் மீண்டும வடபகுதிக்குள் வரமுடியாது என இராணுவத்தினர் மிரட்டினர். இன்னும் ஐந்து நாட்களின் பின்னரே வடபகுதிக்குள் மக்கள் நுழைய அனுமதிக்கப்படுவர் என்றும் அவர்கள் கூறினர்.

மேலும் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான வாகனங்களும் அனுமதிக்கப் படவில்லை.

## சங்கீத, நடன ஆசிரியர் கூட்டம்

"சாவகச்சேரிக் கோட்டத்தில் கடமையாற்றும் சகல சங்கீத-நடன ஆசிரியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் மேற்படி ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரர் பணித்துள்ளார். அதிபர்கள் இதைக் கவனத்திற் கொள்ளுமாறுமேலும் கேட்டுள்ளார்.

## அச்சுவேலி ஆஸ்பத்திரி ஷெல்லினால் பாதிப்பு

(நமது நிருபர்)

அச்சுவேலி வைத்தியசாலையைச் சுற்றி எறிகணைத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அவ் ஆஸ்பத்திரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு மிக அருகே மூன்று எறிகணைகள் விழுந்து வெடித்துள்ளமையை காணக்கூடியதாக இருந்தது

இத்துடன் கதிரிப்பாய், நவக்கிரி, புத்தூர், அச்சுவேலி பகுதிகளில் இவ்வாறு எறிகணைகள் விழுந்து வெடித்துள்ளன. (நி)

## பண்ணிசை

கல்வியங்காடு சிறி வீரபத்திர சுவாமி ஆலய வழிபாடு சபையினரால் நடாத்தப்படும் பிரார்த்தனை வழிபாடும் பண்ணிசை நிகழ்ச்சியும் நாளை வெள்ளி பிற்பகல் 2-30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

## 500 நெற்செய்கையாளருக்கு கடன் வழங்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வரும் பெரும் போகத்தின் போது நெற்செய்கையாளருக்கு கடன்களை வழங்குவதற்கு மக்கள் வங்கி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக சுமார் 500 விவசாயிகளுக்கு மேற்படி கடன்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்காக சுமார் 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது தொடர்பாக தெரிவிக்கையில் கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, உடுவில் யாழ்ப்பாணம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வாழும் நெல் செய்கை செய்யும் விவசாயிகளுக்கே மேற்படி திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திற்கு இவ்வாறான நெற்செய்கைக்கு 15மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் யாழ் மாவட்டத்தின் கடனை மீள செலுத்தலை மையமாக கொண்டு கடன் வழங்கும் தொகையை அதிகரிக்க உள்ளாதாகவும் மேலும் தெரிவித்தார்.

## இயக்கச்சி எறிகணைவீச்சு 11 பொதுமக்கள் காயம்

[நமது நிருபர்]

ஆனையிறவு பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இயக்கச்சிப் பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

பளை அரசங்கேணியைச் சேர்ந்த வாரித்தம்பி வசந்த ஜானகி [வயது 27] செல்லத்துரை அன்னலட்சுமி [வயது 38] பரராசசிங்கம் சிவகுமார் [வயது 10] இவரது சகோதரர்களான சிந்துஜா [வயது 08] சிவதீபன் [வயது 06] இயக்கச்சியைச் சேர்ந்த தவராசா தர்மசோதி [வயது 17] நாகரட்ணம் மகாலட்சுமி சே. இராஜேந்திரம் [வயது 50] நடராசா தினம் [வயது 44] க. தங்கறூபன் [வயது 10] கிளாலியைச் சேர்ந்த வா. சிவராசா [வயது 22]

காயமடைந்த இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி).(86)

## சாவகச்சேரி பகுதியில் 7 பேர் படுகாயம்

(நமது நிருபர்)

தென்மராட்சிப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர்மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய மூன்று எறிகணைகள் சாவகச்சேரி யூனியன் பேக்கரி பகுதி, நுணாவில் கிழக்கு 190-ம் கட்டை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

மேற்படி எறிகணைகளால் பொன்னையா சந்திரமதி (வயது 27) நுணாவில் கிழக்கு, குணபாலசிங்கம் கமலாம்பிகை (வயது 36) நுணாவில்...

## எவருடனும் கூட்டு இல்லை

காங்கிரஸ் கட்சி இனிமே[ல்] தேர்தல்களின் போது அ. இ. அ. தி. மு. க வுடனோ, தி. மு...

# மரண அறிவித்தல்கள்

### வீரச்சாவு எய்திய

## குருபரன்

இக்கரை களபூமி காரைநகரைச் சேர்ந்த சோமசுந்தர ஐயர் குகனேசசர்மா-பூமாலக்ஷ்மி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் குருபரன் (கு ஸ்ரீஸ்கந்தராஜாசர்மா யாழ். காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய மாணவன்) 28-9-93 செவ்வாயன்று வீரச்சாவு அடைந்து விட்டார். இவர் சிவாஜி சர்மா (செருக்கன்பதி பிள்ளையார்கோவில் சாவகச்சேரி), சரோஜினிதேவி, சற்குணராஜா சர்மா (சித்தன்கேணி சிவன்கோவில்), சண்முகராஜா சர்மா (யாழ். கல்வித்திணைக்களம்), சரவணபவானந்தராஜா சர்மா (யாழ். பல்கலைக்கழகம் 2nd year Phy-Science), சசிகலாதேவி, சகுந்தலாதேவி (சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

தற்போதைய முகவரி: பங்குருலேன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

சோ. குகனேச சர்மா (தந்தை)

(சி/7519)

## குணரத்தினம் குணராஜ்

### (கார்வண்ணன்)

வேலணை 4-ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்போது 47 செங்குந்தா வீதியில் வசித்தவருமான குணரத்தினம் திலகவதி தம்பதிகளின் மகனாகிய குணராஜ் (கார்வண்ணன்) 29-9-93 இல் இயக்கச்சியில் வீரச்சாவடைந்துவிட்டார். இவர் திருமதி சோதிமதி, திருமதி விஜயலஷ்மி, அருட்செல்வன், கதிர்ச்செல்வன், கலாநிதி, ஆனந்தராஜ், விக்கினராஜ், ரஞ்சிதமலர் ஆகியோரின் அருமைச் சகோதரரும், கமலநாதன், செல்வரட்ணம், சத்தியபவானி, மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (30-9-93) காலை 12-00 மணிவரை அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருக்கும்.

தகவல்:

47, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

க. குணரத்தினம் (தந்தை)

(6140)

## வீரவேங்கை மனோ

### (யாழிசை)

திருலோகசிங்கம் செல்வராணி

காங்கேசன்துறை பட்டினசபையைச் சேர்ந்த வீரவேங்கை மனோ (திருலோகசிங்கம் செல்வராணி நேற்று (29-9-93) வீரச்சாவடைந்துவிட்டார். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

தற்போதைய முகவரி: மானிப்பாய் மேற்கு, 5-ம் நம்பர் வீடு, கட்டுடை.

தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள்.

(6141)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஹெலி தாக்குதல் இருவர் காயம்

[கிளிநொச்சி]

குஞ்சுப்பரந்தன் பகுதியில் கடுமையான ஹெலி தாக்குதல் நடாத்தப்பட்டதில் தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை சிறிலங்கா விமானபடைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று இத்தாக்குதலை நடாத்தியது.

சிவலோகநாதன் [27] என்பவரும் இவரது இரண்டு வயது மகனான சி. சுரேஷ்குமார் என்பவருமே காயமடைந்தனர்.

மேற்படி குழந்தையின்குடல் வெளியே வந்த நிலையில் அவசரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(நமது நிருபர்)

ஆனையிறவு பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இயக்கச்சிப் பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

பளை அரசங்கேணியைச் சேர்ந்த வாரித்தம்பி வசந்த ஜானகி [வயது 27] செல்லத்துரை [அன்னலட்சுமி [வயது 38] பரராசசிங்கம் சிவகுமார் [வயது 10] இவரது சகோதரர்களான சிந்துஜா [வயது 08] சிவதீபன் [வயது 06] இயக்கச்சியைச் சேர்ந்த தவராசா தர்மசோதி [வயது 17] நாகரட்ணம் மகாலட்சுமி சே. இராசேந்திரம் [வயது 50] நவரத்தினம் [வயது 44] க. தங்கரூபன் [வயது 10] கிளாலியைச் சேர்ந்த மா. சிவராசா [வயது 28]

காயமடைந்த இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி).(86)

# தென்மராட்சி பகுதியில் 3000 பேர் இடம்பெயர்வு

(நமது நிருபர்)

இயக்கச்சிப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் பளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து சுமார் 629 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என யாழ், செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சாவகச்சேரிப் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகள் ஆலய மடங்கள் மற்றும் பொது நலஸ்தாபனங்களின் கட்டடங்கள் என்பனவற்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு ஒரு கிழமைக்கு சமைத்த உணவு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### இரத்தம்

இரத்ததானம் செய்யவிரும்புவோர் மேற்படி இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு இரத்ததானம் செய்யும்படி இரத்தவங்கி அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

### நவக்கிரி

கந்தசாமி லோகேஸ்வரன் [வயது 12]. இவரது சகோதரன் கந்தசாமி நித்தியானந்தன் [வயது 04], எஸ், நாகராசா [வயது 36], கந்தையா நித்தியானந்தன் [வயது 44], மற்றும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த நல்லையா கமலாதேவி [வயது 45]. பண்டாரி சிவலை [வயது 59], நிலாவரையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி [வயது 38], பாலசுப்பிரமணியம் நவரட்ணராணி [வயது 35] மற்றும் காயமடைந்து வீதியில் அநாதரவாகக் கிடந்த இருவயது குழந்தை ஆகியோரி காயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைவரும்சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி)

### எனக்கு மேல்

நேற்றுக் காலை நவக்கிரி பகுதியில் உள்ள ஒரு சனசமூக நிலையத்தில் என்னுடன் சேர்த்து ஒன்பது பேர் வரை புதினப் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருந்தோம் அப்போது திடீரென பலாலிப் பகுதிகளிலிருந்து எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை எமக்குச் சமீபமாக வீழ்ந்து வெடிக்கத் தொடங்கியமையால் அச்சமடைந்து நான் நிலத்தில் வீழ்ந்து படுத்த போது மற்றைய எட்டுப் பேரும் எனக்கு மேலே வீழ்ந்து படுத்தார்கள்.

அவ்வேளை எறிகணை ஒன்று சனசமூக நிலைய மீதுவிழ்ந்து வெடித்தது. இதனால எனக்கு மேல் கிடந்தவர்கள் காயமடைந்தனர். அவர்கள் எல்லோரும் கூக்குரலிட்டபடி எழுந்த போது நால்வர் கடும் காயங்களுக்குள்ளாகிதுடிதுடித்துப்பலியாகியதைக்கண்டேன். மற்றைய நால்வருக்கும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

நான் உடனடியாக அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி யாழ் வைத்தியசாலைக்கு கொண்டுவந்தேன். வரும் போது வழியில் சிலசடலங்கள் கிடப்பதைக்கண்டேன். ஆனால் அவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. பெரும்பாலும் வழிப்போக்கர்களாக இருக்கலாம்எனநினைக்கின்றேன் என்றார்.

### அச்சுவேலி

வீடுகளில் தங்கியுள்ளனர்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் மேற்கு, நவக்கிரி ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச்சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்று கொண்டு இருப்பதை நேற்று மாலை காணக்கூடியதாக இருந்தது (நி)

### வடக்கில்

யீட்டுப் பெயரில் மேற்கொள்ளப்படுவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் அறிவித்தது. விமான, பீரங்கி கவசப்படைகளின் உதவியுடன் காலாட்படையினர் இந்நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுக்கு வடக்கே உள்ள புலிகளின் முகாம்களை தாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கையின் முதல் நாள் நடவடிக்கையின் போது 10 படையினர் காயமடைந்ததாகவும் செயற்பாட்டு தலைமையகம் தெரிவித்தது இதனிடையே கடந்த திங்கள் காலை அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும இராணுவ நடவடிக்கை நீடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சாவகச்சேரி பகுதியில் 7 பேர் படுகாயம்

(நமது நிருபர்)

தென்மராட்சிப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர்மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய மூன்று எறிகணைகள் சாவகச்சேரி யூனியன் பேக்கரி பகுதி, நுணாவில் கிழக்கு 190-ம் கட்டை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன,

மேற்படி எறிகணைகளால் பொன்னையா சந்திரமதி (வயது27) நுணாவில் கிழக்கு, குணபாலசிங்கம் கமலாம்பிகை (வயது 36) நுணாவில் கிழக்கு. என் தலராஜா (வயது 50) வேப்பங்கேணி பளை, மற்றும் இவரது மகனான ஐங்கரநாதன் (வயது 10), விறகு வியாபாரம் செய்பவரான ஏ.சிங்கராசா (வயது 33) கைதடி, அகத்தீன் (வயது 67) புலோப்பளை ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் ச திினேஸ் (வயது 07) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பங்கங்களினூடாக சுமார் 500 விவசாயிகளுக்கு மேற்படி கடன்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்காக ...ணம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வாழும் நெல் செய்கை செய்யும் விவசாயிகளுக்கே மேற்படி திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுவதாக தெரிவித்தார்,

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திற்குஇவ்வாறான நெற்செய்கைக்கு 15மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் யாழ்மாவட்டத்தின் கடனை மீள செலுத்தமை ... மையமாக கொண்டு கடன் வழங்கும் தொகையை அதிகரிக்க உள்ளாதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எவருடனும் கூட்டு இல்லை

காங்கிரஸ் கட்சி இனிமேல் தேர்தல்களின் போது அ. இ. அ. தி. மு. கவுடனோ, தி.மு.கவுடனோஒருபோதும் கூட்டு சேரப்போவதில்லை என்று காங்கிரஸ் கட்சியின் தமிழக இளைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

பழநி ராணிப்பேட்டை தேர்தல் முடிவுகளில் கட்சி தோல்வியை எதிர்பாராததே என சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், ... தப் பின்னடைவு தற்காலிகமானதே எனவும் குறிப்பிட்டார்.

## கடற்றொழிலாளர் கடன் பன்முகப்படுத்த முயற்சி

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அடுத்தமாத ஆரம்பத்தில் கடனுதவி வழங்க மக்கள் வங்கி ஏற்பாடுகள் செய்துள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக சுமார் 100 பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களூடாக சுயதொழில் வாய்ப்புக் கடன்கள் வழங்கப்படும் என்றும் ஆரம்பத்தில் இதற்காக ரூபா 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## வீரவேங்கை ஈசன்

### (நடராசா சர்வேஸ்வரன்)

யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த [நட]ராசா சர்வேஸ்வரன் 29 09-93 அன்று வீரச்சாவடை[ந்]தார், அன்னார் நடராசா (ஆசிரியர், யாழ், கனக[ரத்]தினம் மகாவித்தியாலயம்) மகேஸ்வரி ஆகியோரின் அ[ன்பு] மகனும், வாசுகி (மாணவி, யாழ் இந்து மகளிர் கல்[லூரி] யாழ்ப்பாணம்) மகேஸ்வரன் (யாழ். கனகரத்தினம் [மகா] வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆ[வார்]. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்[கள்] அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

39/23 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

வை. நடரா[சா]

(சி/7521)